கலா சிந்தாமணி

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"
—திருக்குறள்

புத்தகம் 3	பிங்கள ௵ தை௴ ஜனவரி௴ 1918	சஞ்சிகை 4

கடவுள் வணக்கம்.

பூமலர்மிசைவருபுனிதனாதியோர்
தாமுணர்வரியதோர்தலைமையெய்தியே
மாமறைமுதற்கொருவடிவமாகியோன்
காமருசெய்யபூங்கழல்கள்போற்றுவாம்.

—கந்தபுராணம்.

உலகம்யாவையுந்தாமுளவாக்கலு
நிலைபெறுத்தலுநீக்கலுநீங்கலா
வலகிலாவிளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கேசரணங்களே. —இராமாயணம்.

மூலமா யெவைக்கு மறியொணா வுருவாய் மும்மலங்களைந் தவர்க் கெளிதாய், ஆலபோ சனஞ்செய் தழிவிலா தவனா யருமறைச் சிரத்தொளிர் பவனாய்ப், பாலலோ சனனாய்ப் பசுதொறும் பதியாய்ப் பக்குவ சனகனா தியர்க்காய், ஆலமா நீழ லமர்ந்துறை பவனை யகத்தவி சிருத்தியின் படைவாம்.

—பதிபசுபாச விளக்கம்.

தனக்குவமையில்லாதான்றாள்சேர்ந்தார்க்கல்லான்
மனக்கவலைமாற்றலரிது.
வேண்டுதல்வேண்டாமையிலானடிசேர்ந்தார்க்
கியாண்டுமிடும்பையில. —திருக்குறள்.

பிங்கள௵ தை௴

கே.	குரு.		1917௵ டிசம்பர்-ஜனவரி௴		
ச.	ஜனவரி௴ 15உ க்குராசி சக்கரம்.	சுக்.	உத்தராயணம் ஏமந்தருது	பசலி 1326 1327	சாலி 1840
		ர.	கொல்லம் 1092.	கலியுகம் 5019	ஹிஜரி 1335
கு.		பு. ரா.			

யோகம்.	இங். மீ.	தமிழ் மீ.	வாரம்.	திதி, நக்ஷத்திரம், முதலியன.
அ	13	1	ஞா	பிர 46-33. உத் 37-9, ஹஸ் 23-44, கிம் 20-2.
அ	14	2	திங்	துவி 39-17, திர 31-39, வ 14-50, பா 13-2.
சி	15	3	செ	திரி 31-42, அசு 25-53, வி 5-36, தை 5-30.
சி	16	·4	புத	சப் 24-15, சத 20-12, வ 47-16, பவ 50-40.
சி	17	தை 5	வி	பஞ் 17-14, பூசம் 14-55, ப 38-42, கவு 43-59.
சி	18	6	வெ	ஷஷ்ட 10-57, உத் 10-23, சிவ 30-48, கர 38-10
பி	19	7	சனி	ஸப் 5-39, ரே 6-48, சித் 23-46, பத் 33-25.
ம	20	8	ஞா	அஷ் 0-59, அசு 4-20, சா 17-39, பா 29-50. நவ 58-30.
சி	21	9	திங்	தச 56-48, பஞ் 3-3, சுப 12-24, தை 27-30.
சி	22	10	செவ்	ஏகா 56-16, கார் * 35, சுப் 8-21, வ 26-24.
சி	23	11	புத	துவா 56-54, ரோ 45, பி 5-3, பவ 26-27.
ம	24	12	வி	திர 58-35, மிரு 6-17, மா 2-40, கவு 27-37.
ம	25	13	வெ	சதுர் 60-0, திரு 9-29, வை 1-6, கர 29-48.
சி	26	14	சனி	சதுர் 1-16, புன 13-33, வி 0-18, பத் 32-58.
சி	27	15	ஞா	○ பௌ 4-54, பூசம் 18-42, பி 0-12, பா 37-3.
சி	28	16	திங்	பிர 9-25, ஆயி 24-34, ஆ 0-46, தை 41-57.
சி	29	17	செ	துவி 14-41, மக 31-10, ஸ 1-56 வ 47-37.
அ	30	18	புத	திரி 20-39, பூரா 38-18, சோ 3-37, பவ-53-46
ம	31	19	வி	சதுர் 26-58, உத் 45-45, அ 5-38, பா 26-58.
அ	1	20	வெ	பஞ் 33-23, ஹஸ் 53-8, சு 7-47, கவு 0-11.
ம	2	21	சனி	ஷஷ்ட 39-21, சித் 60-0, தி 9-47, கர 6-29.
சி	3	22	ஞா	ஸப் 44-26, சித் 0-2, சூ 11-19, பத் 12-2.
அ	4	23	திங்	அஷ் 48-9, சுவா 5-55, க 11-59, பா 16-30.
ம	1918-பிப்ரவரி௴ 5	24	செவ்	நவ 50-8, விசா 10-20, வி 11-28, தை 19-22.
அ	6	25	புத	தச 50-4, அநு 13-0, து 9-34, வ 20-21.
பி	7	26	வி	ஏகா 47-57, கேட் 13-40, வி 6-3, பவ 19-15.
அ	8	27	வெ	துவா 43-46, மூல 12-18, ஹ 0-55, கவு 16-6.
சி	9	28	சனி	திர 37-52, பூர 9-2, வி 46-8, கர 11-0.
அ	10	29	ஞா	சதுர் 30-29, உத் 4-10, வி 36-55, பத் 4-20.
சி	11	30	திங்	● 22-3, அசு 51-7, வ 29-55, கிம் 47 36 அமாவாசை தர்ப்பணம்.

இயற்கை அமைப்பு-3

கடந்த சஞ்சிகைகளில் தாவரங்களைப் பற்றியும், மிருகதோற்றங் களைப்பற்றியும் ஆராய்ந்தாம். இப்போது, சீவராசிகளிற் றலைமை பூண்ட மனிதனைப் பற்றி சில கூறுவாம்.

மானுடதேகத்தை ஒருவன் ஆராய்ந்து சீர்தூக்குவதானால் அதன் கணுள்ள விசித்திர விநோதங்களும் கிரம பிரயோசனங்களும் எத்துணைச்சிறந்த விவேகிகளது புத்தி சாதுரியத்தையும் கடந்து அப்பாற் செல்லும் தகையதாம்.இந்த உடம்பின் கண்ணே, யாவரானும் எக்காலத்தும் ஆக்குதல்கூடாத அதிவிநோத அதிப்பிரயோசனம் படைத்த பஞ்சப் புலன்களுண்மையும், அப்புலன்களைக் கிரகித்தற் பொருட்டு ஆங்காங்கே அததற்குரிய வேறு வேறு பஞ்சப் பொறிகள் அமைந்து கிடத்தலும், ஒவ்வொரு பொறிகளிடத்தும் அததற்குரிய புலனைக் கிரகித்தற் பொருட்டு இன்றியமையாது வேண்டப்படும் பதார்த்தங்களெல்லாம் அமைக்கப்பட்டுக் கிடத்தலும் பொறிகள் அனைத்தும் தாம் கிரகித்த அறிவை மூளைக்குக் கொண்டு செலுத்துமாறு இயைந்த நரம்புகளால்—அதாவதுகண் காட்சி நரம்பானும், மூக்கு முகர்ச்சி நரம்பானும், காது கேள்வி நரம்பானும்—மூளையோடு இசைக்கப்பட்டிருத்தலும் இவ்வியல்பினவாகிய புலபதார்த்தங்களும் புலநரம்புகளும் உரிய பொறிகளி னன்றிப்பிறவற்றிலே மறந்தும் அமைந்திராத அந்தப்பெருங்கிரமமும், இந்தப் பொறிகளாகிய கண் காது முதலிய மிகவிசித்திர மானஉறுப்புகளுக்குத் தீங்கு சேரிடாவாறு காக்கவல்ல கண்ணிமை, மயிர், குடுமி முதலி யவைகளால் காக்கப்பட்டிருக்கும் முறையும், இந்தப் பொறிகளெல்லாம் வேண்டிய வேண்டிய தானங்களில்அமைக்கப் பட் டிருக்கும் அப்பெருஞ் சிறப்பும் நன்கு உற்று நோக்கத்தக்கன.

2. நமது கட்பொறியை மாத்திரம் சிறிது சிந்தித்துப்பார்க்கலாம் அது அமைந்துள மகா அதிசய விநோதமும், அதன் பேர் அருமையும், அதன் எண்ணிறந்த பிரயோசனமும், அஃது நமது அறிவுக்கெல்லாம் பெருந்தாரகமாக அமைந்து கிடக்கும் மாட்சியும், அதனுள்ளே அமைந்து விளங்கும் காட்சிப் பதார்த்தங்களின் விநோதமும், அப்பதார்த்தங்களின் அதி மிருதுவாகிய நுண்மையும், இந் நுண்ணிய பதார்த்தங்களால் பார்வைத் தொழிற்கு இன்றியமையாது வேண்டப்படும் படலங்கள், மணிகள், நரம்புகள் என்றுள்ள இவையெல்லாம் கிரம நெறிதவறாது படி முறையே வரிசையாக அடுக்கி அமைக்கப்பட்டுள்ள சிறப்பும், அம்மணி முதலாயின கருவிகள் காட்சித் தொழிற்கு வேண்டியவேண்டியபடி விரிந்தும், சுருங்கியும், சுழன்றும் அமைந்து கொண்டிருக்கும் அப்பெரு நூதனமும், இவை காரணமாகக் காட்சிப் புலன் சித்திக்கும் அப்பெரு விந்தையும்; கண்களிற் படும் அழுக்குகளை அவ்வப்போதே மெல்லென ஒற்றி எடுக்கவல்ல மயிர் நிரை பதிக்கப்பெற்ற மடல்கள் கீழும் மேலும்சிறு கதவங்களை ஒத்து நிலவப் பெற்றுள்ள நூதனமும்;

இந்த மடல்கள் நம்முயற்சியின்றியே தாமே தமது தொழிலை ஓயாது செய்து கொண்டிருக்கு முறையும்; இன்னமும் கண்ணுக்கு யாதேனும் தீங்கு நேரிடின் அதனை விரைந்து சென்று விலக்குமோர் இயற்கை இம்மடல்களுக்குக் கொடுக்கப்பட் டிருக்கும் மரபும், கண்கள் பிரமாணத்தால் ஒன்றற் கொன்று விகாரப்படுவ துண்டானால் காட்சிக்குப்பேரிழுக்காய் முடியுமாதலின், அவை இரண்டும் சம அளவாய் அமைக்கப் பட்டிருக்கும் கணித வியுற்பத்தியும், அவை அமைக்கப் பெற்றுள வரிசையிற் சிறிது பிசகுவதுண் டென்றாலும் நமது காட்சித் தொழில் பெரிதும் பிழைபட்டு விடுமாதலின், அவை இரண்டும் ஒரே வரிசையில் தகுந்த தானத்தில் அமைக்கப்பட் டிருக்கும் நூதனமும் இன்னும் அளவிட்டுச் சொல்ல முடியாத பேரதிசயங்களும் கடவுள் பேரருட் குணங்களை விளக்குவனவாம்.

3. இனி எமது தேகம், அதி விசித்திர சிற்ப நுட்பங்களமைந்ததோர் அத்தாணி மண்டபத்தை ஒத்துப் பற்பல உறுப்புகளை யுடைத்தாகி அந்தந்த உறுப்பெல்லாம் அது அதுக்குரிய அளவை ஆகிருதிகளை யுடைய பற்பல எலும்புகளால் நிரைத்து, நரம்புகளால் இயைத்து, தசையாற் பொதிந்து, தோலால் வேய்ந்து ஆங்காங்கே அதி நுட்பமாகியகடிகாரங்கள் தம்மினும் மகா நுட்ப மமைந்த பலப்பல விநோத யந்திராங்கங்களைக் கொண்டு, நவத்துவாரங்களாகிய சாளரங்களமைந்து (அச்சாளரங்களெல்லாம்தத்தமக்குரிய அரும்பெரும் பிரயோசனத்தைத்தந்து கொண்டிருப்ப) வாய்ந்துளதோர் பேராச்சரியப்பெருமாளிகையாகும். இப்பெரு வியப்பமைந்த மாளிகை, நமது பாவனைக்கு இன்றியமையாது வேண்டிய வண்ணம் அதிப்பெலமுடையதாயிருந்தும், அப்பெலத்தோடு, அதுவேண்டிய வேண்டிய வாறு வசைதலையும் பொருந்தி நிற்றற்பொருட்டுத் தக்க தானங்களிலே சந்துகளைக் கொண்டிருத்தலும், அச்சந்துகளிலெல்லாம் கதவங்களில் அமைக்கப்படும் பிணையல்களை யொத்து, முன்னும் பின்னும் விரிந்தும், சுருங்கியும் வருந் தகுதியுடைய நரம்பு மண்டலங்கள் அமைக்கப்பட் டிருத்தலும்; நாமெல்லாம் நந்தொழில்களை இனிது நடாத்துதற்குப் பேருபகாரமாயுள்ள உயர்வொப்பில்லாப் பெருஞ் சிறப்பமைந்த இரண்டு கைகளும் கால்களும் அளிக்கப்பட்டிருத்தலும், இந்தக் கைகால்கள் தத்தமது தொழிலை இனிது நடாத்துதற்கியைந்தவாறு சம அளவினவாய் ஆக்கப்பட்டுச் சமதானங்களிலே நிறுத்தப்பட் டிருத்தலும், இவற்றிலேயே தொழில் செய்தற்கு இன்றியமையாது வேண்டப் படுவனவாகிய விரல்கள் இயைக்கப்பட்டுக் கிடத்தலும், இவ்விரல்கள் தொழில் செய்தற் கினிதியலு மாறு, மற்றை அங்கங்களினும் மிக அதிகமாகிய பொருத்துகளைக் கொண்டிருத்தலும்; இப்பொருத்துகளிற் சந்திக்கும் இரண்டு என்புகளும் ஒன்றோ டொன்று செவ்விதிற் பொருந்துமாறு இயைபுற ஆக்கி அமைக்கப்பட்டிருத்தலும்; இந்தச்சிற்றங்கங்கள் தாமும்விரிந்தும் சுருங்கியும்இயங்குமாறு நுண்ணியநாடி பந்தனம் செய்யப்பட் டிருத்தலும்; இந்த நாடிகளுட் பல எமது

பிரஞ்ஞையின்றியும், துயில் முதலிய காலங்களிற்றானும் தாமே இயங்கி எமது சீவனுக்குப் பெரும் பாதுகாப்பாயிருத்தலும் கடவுளின் சிருட்டிக்கிரம பேர் அற்புதங்களாம்.

4 நாம் உட்கொள்ளும் உணவுகளை அரைத்துப் பொடி படுத்தற்பொருட்டு அதற்கியைந்த வன்மை படைத்த பல்வரிசைகள் அமைக்கப்பட்டிருத்தலும், இப்பல் வரிசைகள் மற்றை அங்கங்களைப் போலல்லாது அரைத்தற் றொழிற்குரிய வடிவமும், வன்மையும் படைத்துக்கிடத்தலும், இவற்றுள் உணவுகளைத் துண்டங்களாக்குதற் கியன்ற பற்கள் ஒருபுறமாகவும், அத்துண்டங்களைப் பின்னர்ப் பொடி படுத்தற் கியன்ற பற்கள் ஒருபுறமாகவும் நிரைக்கப்பட்டிருத்தலும்; இந்தப் பற்கள் நாமெல்லாம் வன்னெறி படைத்த உணவுகளை உண்டற்குரிய பிராயத்தை எய்திய பின்னே நம்பாற்றோன்றுதலும், இப்பற்களால் அரை யுண்டு பொடி படும் உணவுகளைக் குழைத்துப் பாகஞ்செய்தற்கமைந்த உமிழ் நீர் நமது வாயிலே அமைக்கப் பட்டுள்ளமையும்; இந்த உமிழ் நீரிலே நமது ஆரோக்கியத்துக்குப்பெரிதும் வேண்டப்படும் சத்தமைந்து கிடத்தலும்; இதனுல் குழைத்து அரையுண்ட உணவை உள்ளே செலுத்தற் கமைந்ததோர் குழல் வாயின் கண் இயைக்கப் பட்டுள்ளமையும் இந்தக்குழல் உணவுகளை ஏற்றுப்பரிபாகஞ் செய்யவல்ல இரைப்பையோடு இணைக்கப்பட்டுக் கிடத்தலும் இவ்விரைப்பை அவ்வவர் தேகத்துக்குத் தக்க அத்துணைப் பிரமாணங்கொண்டு கிடத்தலும், அங்கே நாம் உண்ணும் உணவுகளை அந்நுவயஞ்செய்து சத்துகளை வேறுக்குமோர் பேரதிசய ஆற்றல் படைத்துள பாசக நீருண்மையும் இப்பாசக நீரால் பிரிவுற்ற சத்து அன்னப் பாகாய்த்திரிந்து குடருட்புகுதலும், இங்ஙனம் புகுங்கால் அவ்வன்னப்பாகு பித்தாசயத்தினுள்ள பித்தத்தின் வலியால் அன்னரசமாய்த் திரிந்து, பின்னர்ச் சிறிது சிறிதாக இரத்த வடிவெடுத்து நரம்புவழியாக உதிரத சிரத்துட் செல்லுதலும், அன்னப்பாகு இங்ஙனம் செல்ல, சமீகரணமுறையாற் கழிவுற்ற கழிவுகளெல்லாம் பிறிதோர் வழியாற் பிறிதோர் குடருட் கிரமந்தவறாது புக்கு மல நீராதிகளாக மாறி வெளியே கழிதலும்; இவற்றை யெல்லாம் இந்த முறை தவறாது ஆங்காங்கே கொண்டு செலுத்தவல்ல வாயு சூடு முதலியன தகுந்த அளவைப்படி அமைந்துள்ளமையும், இனி முன்னர் உதிரத சிரத்துட்சென்ற இரத்தம் ஒன்றன்பின் ஒன்றாய் நால்வகை ஆயசங்களுட் சென்று படிமுறையே பூரணசுத்தி அடைந்து உதிர அணுக்களின் துணையால் நரம்புகள் வழியாக உடம்பெங்கணும் செல்லுதலும் இவ்விரத்தத்தால் தசைக்கு மாத்திரத்தினமையாது என்பு, நரம்பு, மயிர், மூளை, நகம் முதலிய அனைத்துறுப் புகட்கும் அததற்கியைந்தபடி ஆகாரம் செல்லுதலும்; ஆயசத்தினின்று இரத்தத்தை உடம்பெங்கணும் கொண்டு செலுத்தும் உதிர அணுக்கள் அங்ஙனம் செலுத்துகையினுல் அழுக்கடைந்து பின்னர்ப் பிறிதோர் நரம்பு வாயிலாற் பின்னும் உதிரதசிரத்துட்புக்குச் சுத்தி அடைந்து,

மீட்டும் தமது தொழிலை ஓவாது செய்து கொண்டிருத்தலும், இவ்வாறே நாம் உட்கொள்ளும் உணவுகள் நமக்கியைந்த தசையாதிகளாக உருத்திரியும் அவ்வதி நூதன அதிசயமும், இந்த அதி நூதன அதிசயங்களையெல்லாம் புரிதற்கியைந்த பதார்த்தங்கள் ஆங்காங்கே அமைக்கப் பட்டுள்ளமையும், இனி எமது உடம்பின்கணுள்ள மற்றெந்த உறுப்பினும் மகாமுக்கியம் படைத்துத் தமக்கோர் அபாயம் நேரிடின் முழுதுடம்பும் பாழ்பட்டழிந்து விடத்தக்க அத்துணைப்பெரு விசேடங்கொண்டு கிடக்கும் மூளையும் இரத்தாசயமும் பிற அங்கங்களைப்போலல்லாது, மிகப் பலங்கொண்ட இரண்டு என்புக்கூட்டுள் அமைந்துத் தீங்கு நேரிடாவாறு பாதுகாக்கப்பட்டுக் கிடத்தலும், இவ்வியல்பிற்றாய அதிநூதன தேகத்தைக்கொண்ட தோற்றங்கள் ஒன்றிலிருந்து வேறொன்று உற்பத்தியாகிப் பெருகும் அப்பெரு விநோதமும், அவ்வாறு பெருகுதற் பொருட்டு இன்ன பல பேராச்சரியப் பெருநூதனங்களையெல்லாம் சூக்குமித்துக் கருவாக்கி அவ்வவற்றின்கண் அமைத்திருக்கு முறையும் அக்கருக்கள் கருப்பாசயங்களிற் படிந்தபின் எய்தும் பிரயோசனங்களும் இங்ஙனம் கருவாய் குழவிகட்கு அவ்வக்காலத்தே இயைந்தபடி உணவுசென்று போஷிக்கும் அப்பேராச்சரிய மரபும் இவ்வாறு கருவினின்று உற்பத்தியாகும் ஒவ்வொரு தோற்றத்தினும் மேல் விரித்துக்காட்டிய அத்தியந்த அதிசய நிலையமைந்த கிரம பிரயோசன விநோதங்கள் யாவும் சிறிதும் பிறழாது அமையும் நியதியும், இன்னும்விரிவஞ்சி விடப்பட்ட கோடானுகோடி செயற்கை இலக்கணங்களும், அவற்றிற் சம்பூரணமாகக்காணப்படும் கிரமங்களும், அந்தக்கிரமங்களால் எய்தும் பிரயோசனங்களும், இப்பிரயோசனங்களை வரைவின்றிப் பயக்குமாறு ஆங்காங்கே நமது அறிவுக்கெட்டாத அத்துணைச்சிறப்போடு அமைக்கப்பட்டுள்ள அதிவிநோதப் பேரதிசய இயற்கை முறைகளும் மிக ஆச்சரியத்தை உண்டு பண்ணக்கூடியன.

5 இனி எம்மிடத்து அமைந்துள்ள பஞ்சப்பொறிகளையும் மூளையையும் சற்றே சிந்தித்து நோக்குழி இப்பொறிகளெல்லாம் தாம் தாம் கிரகிக்கும் அறிவை மூளைக்குக்கொண்டு செலுத்தும்படி அவ்வத்தொழிற்கியைந்த நரம்பு முதலியவற்றாற் றொடுக்கப்பெற்றுக் கிடக்குமுறையும், அவ்வப்புலனைக் கிரகித்தற் பொருட்டு இன்றியமையாது வேண்டப்படும் அவ்வப்பதார்த்தங்க ளெல்லாம் அவ்வப்பொறிகளிலே சிறிதும் பிறழாது அது அதுக்குரிய பதார்த்தங்களெல்லாம் அவ்வப்பொறிகளிலே சிறிதும் பிறழாது அது அதுக்குரிய பதார்த்தங்கள் அன்றிப்பிற புலன்களுக்குரிய பதார்த்தங்கள் மறந்தும் அமைக்கப்பட்டிலாமையும், அவ்வத்தொழிற் கியைந்தபடி அவ்வப்பொறிக ளெல்லாம் வட்டம், நீளம், ஆழம், உருண்டை முதலிய வடிவங்களைப் படைத்திருக்கு முறையும், இவையெல்லாம் தத்தம் பயனை இனிது பயத்தற்குரிய விசேட தானமாகிய சிரசிற்றானே சிருட்டிக்கப்பட்டிருக்குமுறையும், இவை எமக்கெல்லாம் இன்றியமையாப் பெருஞ்சிறப்பினவாய் வேண்டப் பட்டுக்கிடக்கு நெறியும், பிறவும் ஒருவனது அறிவிற் புகுவதுண்டாயின் இவைகள் மக்கட்குப் பயன் படுதல் வேண்டும் என்னும் பேரிரக்கம் ஒன்றே காரணமாக தன் பயன் கருதாத சர்வசீவதயா பரனால் அமைக்கப் பட்டமை தெள்ளிதிற் புலப்படும்.

"ஜ."

மகர சங்கிராந்தி

இதுவே தைப்பொங்கல் எனக் கொண்டாடப்படும். அயனம் இரண்டு கொண்டது ஒருவருடம். அயனம் இரண்டாவன: உத்தராயணம், தக்ஷிணாயணம். ஆடிமாதம் முதல் ஆறும் தக்ஷியணாயனம் தைமாதம் முதல் ஆறும் உத்தராயணம். அயனம் என்பது கதி அல்லது மார்க்கம். மேடம் முதலாகிய பன்னிரண்டு இராசிகளையுஞ் சூழ்ந்து செல்லும் பொழுது மகரம் முதலாகிய ஆறு இராசிகளிலும் செல்லும் சூரியனுடைய வடக்கு நோக்கிய கதி உத்தராயணம். கடகம் முதலாகிய ஆறு இராசிகளிலும் செல்லும் சூரியனுடைய தெற்கு நோக்கிய கதி தக்ஷிணாயனமாம். இவ்விரண் டயனங்களுஞ் சேர்ந்த மனுவருடம் தேவர்களுக்கு ஒருநாள். அதில் உத்தராயணம் பகல், தக்ஷிணாயனம் இராத்திரியாகும். ஆகவே மார்கழி மாசம் பிரபஞ்ச சிருட்டியைத் திருவுளத்தடைத்து வைந்தவ சத்தியைச் சிருட்டிக்கத் தொடங்குகிற அவசரமாகிய திருப்பள்ளி யெழுச்சிக் காலமாகும்.

தைமாதம் பிராதக் காலத்தின் தொடக்கமாகும். இதுவே மகரசங்கிராந்தி எனப்படும். சங்கிராந்தி என்பது வளைவு அல்லது கடத்தல் எனப்பொருள் படும். அதாவது சூரியன் ஒரு இராசியைக் கடந்து மற்ற ராசிக்குச் செல்லும் அவசரம் சங்கிராந்தி எனப்படும். இதனால் ஒவ்வொரு மாசப்பிறப்பும் சங்கிராந்தி யெனப்படினும் உத்தராயணத் தொடக்கமாகிய தைமாசம் பிறப்பிற்கு அது காரணக்குறியாதல் அதன் விசேடத்தை நன்கு விளக்கும். ஒரு நாளின் பிரிவுகளாகிய பூர்வான்னம், அபரான்னம், மத்தியான்னம் என்னும் மூன்று காலங்களுள்ளும் பூர்வான்னமாகிய பிராதக்காலமே தேவர்களுக்கு மிகப்பிரீதியாகிய காலமென்க. யாம் எழுந்து நித்தியகடன்களை முடித்துக் கொண்டு எமது முயற்சிகளிற் பிரவேசிக்குங் காலம் பிராதக்காலமா யிருத்தல்போல, தேவர்களும் தத்தம்தொழில்களினின்று மனிதர்க்கருள் செய்யத்தொடங்கும் காலம் பிராதக்காலமே யாம். ஆதலினாற்றான் தேவர்களுக்குப் பிராதக்காலத் தொடக்கமாகிய தைமாசப் பிறப்பிலே எல்லோரும் தங்கள் இல்லங்களைச் சுத்திசெய்து அலங்கரித்துப் பாற்பொங்கல் செய்து நிவேதித்து அருச்சனை வழிபாடாதிய இயற்றிச் சுற்றமித்திரரோடுண்டு களிகூர்வார்கள். இவ்வழிபாடு சூரியனைநோக்கிச் செய்யப்படும். உலகம் வழங்கி வருதற்கு முதற்காரணமாகிய மழை உண்டாவதற்குக்காரணம் சூரிய கிரணங்களே. மழை இருப்பினும் உலகிலுள்ள சகல பயிர்களின் வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் சூரிய கிரணங்களே காரணம். சர்வேசுராகிய

சதாசிவமூர்த்தி சூரியனில் அந்தர்யாமியாய் நின்று சிவசூரிய னெனப்பட்டுச் சகலகோடி ஆன்மாக்கட்கும் அருள்புரியா நிற்பர்; ஆதலினால் இந்நாளிற் செய்யப்படும் வழிபாடு சூரிய பொங்கல் என வழங்கும்.

இந்திரன் 'சஸ்யாதிபதி' எனப்படுதலாலும் 'மேகவர்ணன்' எனப்படுதலாலும், உழுது பயிர் செய்வோர் இந்திரனுக்கு விழாச்செய்ய வேண்டுதலானும் இவ்வழிபாட்டை இந்திரனை நோக்கிச் செய்வதுமுண்டு.

'மகரா சங்கிரமேசக்தி' என்னும் ஒருசக்தியானவள் தக்ஷிணாயனம் ஆறுமாசமும் மனிதருக்கு மூதேவி ரூபமாயும் பசுக்களுக்குப் புலி ரூபமாகவும் பீடித்துக்கொண் டிருந்தாள். அந்தப்பீடை ஈசுரானுக்கிரகத்தால் நிவாரணமாகிச் சகலரும் சௌக்கிய மடைந்தபடியால் சூரியன் வடபக்கத்தில் திரும்பும் நாளாகிய தைமாசம் முதற்றேதி மகரசங்கிராந்தி உத்தராயண பிரதம புண்ணிய தினத்திற் சகலரும் சூரியன், இந்திரன், பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் முதலான தேவர்களைப் பூசித்து உப்பின்றிப் பாற்பொங்கல் நிவேதனஞ் செய்து பிதிர் தேவதைகளுக்குந் திலதர்ப்பணம் பண்ணி, வேதியருக்கு இயன்றமட்டும் கோதானம் முதல் தசதானமுங்கொடுக்க வேண்டியது.

ஆடிமாதம் முதலாக மார்கழி மாதாந்தம் வரையும் நாடும் வீடும் மூதேவி யடைந்திருந்த படியால் அவற்றைச் சுத்திசெய்து பழம் பாண்டங்களைக் கழித்துப் புதுப்பாண்டங்களிற் சங்கிராந்தி தினம் அமுது செய்யவேண்டும். அன்றியும் மூதேவியாற் பீடிக்கப்பட்ட அந்தத் தக்ஷிணாயன காலத்தில் புலிகள் பசுக்களைக் கொன்று புசித்துக்கொண் டிருந்தபடியால், பரமசிவன் மேற்குறித்த மகரா சங்கிரமே சக்தியை வாட்டி, பசுக்களாற் புலிகளைத் துரத்தி அதனுஞ்செய்து மனிதருக்கும் பசுக்களுக்கும் சௌக்கியத்தைத் தந்தருளிய பாவனையாக மறுநாள் சாயங்காலம் பசுக்களுக்கு ஸ்நானம் முதலிய அலங்காரம் பண்ணிப் பசுக்களை, முன் துரத்திப் பின்னே சுவாமியை எழுந்தருளப் பண்ணவேண்டிய தென்பதும் ஓர் காரணம்.

மார்கழிமாசம் பீடைமாசம். அப்பீடைய நிவாரணஞ்செய்யும் பொருட்டு அம்மாசம் முதற்றினந் தொடக்கம் முடியுமட்டும் சைவசமயிகளாகிய ஒவ்வொருவர் வீட்டு வாயில்கள் முற்றங்களில் மேடை யிட்டு மெழுகிக் கோலங்கள் போட்டுப் பிள்ளையார் பிடித்து வைத்துப் பூப்போட்டுப் பூசித்து வருவது வழக்கம்.

வேளாண்மைக்குப் பெருங்காரணமாயிருக்கும் பசுக்களின்பொருட்டுப் பட்டிப் பொங்கல் பொங்குவதும் வழக்கம். பசுப்புரையுடையோர் மாட்டுப் பட்டியை அடைந்து அப்பட்டிச் சுற்றுப் புறங்களைச் சுத்திசெய்து வாழை, கரும்பு, பூமாலை முதலியவைகளினாலே அலங்கரித்துப் பசுக்களின் பொருட்டு ஒரு பொங்கல் பொங்குவார்கள். பசு இலக்கண விதியிலே பசுக்களைப் பற்றிக் கூறியிருக்கிற மகத்துவமான இன்ன இன்ன இடத்தில் இன்னின்ன தேவதைகள் அமைந்திருக்கிற தாகத் தியானித்து நந்தை முதலிய பசுக்களுக்குச் சொல்லப்பட்ட அவ்வம் மந்திரங்களினாலே அவ்வப்பசுக்களை நினைந்து பொங்கின அமுதைப்படைத்து நிவேதித்து மாடுகளை அலங்கரித்து ஊர்வலம் வரச்செய்து கொண்டாடுவார்கள். இவ்வழிபாடு கோபாலராதலாலும் காக்கும் கடவுளாதலாலும் விஷ்ணுவை உவப்பித்தற்குச் செய்யப் படுவதாகும்.

போகிப்பண்டிகை என்பது மார்கழிமாதம் முழுவதும் விரதமிருந்தவர்கள் இஷ்டசித்தி யடைந்து போகத்தைப் பெற்று அநுபவிக்கத் தக்க நாளெனப் படும்.

இந்தியாயங்களினாலே தைமாசம் பிறந்த தினத்துச் சூரியோதயத்திலே சைவ சமயிகள் தங்கள் வீட்டு முற்றங்களிலே கோலங்களிட்டுப் பிள்ளையார் பிடித்து வைத்தும், செவ்வந்தி, முல்லை, மருக்கொழுந்து முதலிய சுகந்த பூவர்க்கங்களினாலே அவரை அலங்கரித்து அதன் பின் அடுப்பேற்றிப் புதுப்பானைகள் இரண்டு சுத்திசெய்து ஒன்றிலே புதிய நெல்லரிசிகொண்டு வெண்சாதம் எனப்படுகிற சுத்த அன்னமும் மற்றொரு பானையிற் சர்க்கரை, பால், தேங்காய்த் துருவல் முதலியன இடப்பெற்றச் சர்க்கரைச் சாதமும் பொங்கி இலையிலே படைத்து நெய், பால், தயிர், பழம் முதலியவைகளை அதன்மேலிட்டு விக்கினேசுராருக்கும் சூரியனுக்கும் தூபதீபம் கொடுத்து அமுதை நிவேதித்துப் பூசித்துத் துதித்து வணங்கித் தொழுது கொள்வது சுருதி யுத்திக்கிணங்கிய பெருஞ் சிறந்த செய்கைகளாம். இதனாற் சித்த சுத்தி, ஆணவ அடக்கம், தெய்வபக்தி இவை உண்டாகும். பரசமயிகளுள் ஒருசாரார் தத்தம் விசேட தினங்களை மதுபானத்திற் செலவிட்டுப் பல கொடுந் தீமைகளைச் செய்கின்றனர். அச்செய்கையினும் பார்க்க இந்துக்களாகிய நாம் கடைப் பிடித்தொழுகும் இச்செய்கை எவ்வளவு சிறப்புடைத்து!

பாலசந்திரன்.

நாம் ஒழுக வேண்டிய நெறிகள்

உலகையும் உலகத்திலுள்ள பிண்ட பதார்த்தங்களையும் உற்றுநோக்குங்கால்கருணையே தன் திருமேனியாகக்கொண்ட ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பெற்ற ஊர்வன, நடப்பன, பறப்பன, கிடப்பன, என்னும் எண்பத்துநான்கு லட்சம் ஜீவராசிகளி லும் மேம்பாடுடையதும் தலைமையாயதுமாய மக்கட்பிறப் பினைப்பற்றியே வேதோபநிடதங்கள் முறையிடுகின்றன. உல கான்மாக்களுக்கு நன்னீதியைப் பயப்பிக்கும் பொருட்டு கலை மகளே திருவுருவாகப் போந்த ஒளவைப்பிராட்டியாரும் 'அரி தரிது மானிடராதலரிது' எனக்கூறியுள்ளார். மானுடயாக்கை யைப் பெருந்துணையாகவுடைய ஆன்மாக்களுக்கு ஐம்பொறி யுணர்வொடு அவற்றைப்பகுத்தறியும் மனவுணர்ச்சியும், மிருக யாக்கையைப் பெற்ற ஆன்மாக்களுக்கு அங்ஙனம் பகுத்தறி வின்றிப் பஞ்சேந்திரிய வுணர்வுமாத்திரமே அமைந்திருப்ப தால் இம்மாய வுலகத்தின்கண் மக்கட்பிறப்பே தலையாயதென் பது யாவராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட ஓர் உண்மை.

இப்பிரபஞ்சப்பரப்பில் ஆங்காங்கு பொதிந்து கிடக்கின்ற இயற்கைப்பேறு வேறுபடுவதால் ஏனைய உயிர்ப்பொருட்களு ள்ளும் செயற்கைப்பேறும் மாறவே இப்பகுத்தறிவு ஒவ்வொரு மானிடனிடத்தும் ஒரேமாதிரியமைவது கஷ்ட சாத்தியமே. ஆயினும், மனோவாக்குக்காயம் எனப்பட்ட திரிகரணங்களும் ஒருவனிடத்தில், எவ்விடத்திலேனும் எக்காலத்திலேனும் முரண்கொள்ளாமல் ஒத்திருக்குமாயின் அவைகள் சார்பாய்ச்சா ரும் செய்கைகள் உலகத்தாருக்குப்பயன் தரத்தக்கவைகளாக வேயிருக்கின்றன. இத்திரிகரண சுத்தியானது யாவருக்குங் கிட்டுவது அசாத்தியமாகையால் அதைப் பெறுபவர் சிலரே யாவர். இத்தகைமையினரையே நாம் சான்றோரென்றும், பெரி யார் என்றும், அறிவாளர் என்றும் கூறுகின்றோம். அவர்கள் கூறும் கூற்றும் செய்யும் செயலுமே நீதிநெறிகளாம். ஆகவே அவர்கள் யாது கூறுகின்றனரென்றும் என்ன செய்கின்றன ரென்றும் ஆராய்ந்து அவர்களைப் பின்பற்றுவது நம்போலியர் கடமை.

இம்மண்ணுலகில், மக்கள் யாவரும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான் கனுள், ஒவ்வொன்றினையே யன்றி ஒருங்கே யெய்தப் பெற்று இன்புறும் விருப்பத்தை யுடையவராயிருக்கின்றனரெனினும், முதலிறுதிப்பொருள்களைத் தவிர்த்துஇடைப்பட்ட இரண்டை யும் பெறவிரும்புவார் மிகப்பலராவர்; முதற்கணுள்ளதைவிரும் புவார் சிலர்; முதல் மூன்றினையுமொழித்து வீட்டைப்பெற்று

பேரானந்தமடைவார் வெகு சிலரேயாவர். பொருளுமின்பமுமிம்மையிலேயே மறைதலானும், அறம் இம்மை மறுமையினுமூதவி வீட்டுக்குச் சாதனமாயிருந்தாலும், வீடோ தன்னையெய்தப் பெற்றோருக்குப் பிறப்பிறப்புத் துன்பத்தினின்றும் நீக்கி பேரின்பு புகட்டவல்லதாகையானும், அதையே மேலார் விரும்பி அதற்குறிய சாதனங்களைப் பெறுதற்குத்தக்க முயற்சி செய்வார். சாதனங்களுள் முக்கியமானவை தத்தஞ்சமய நூலுணர்ச்சியும் அந்நூல்நெறியுணர்ந் தொழுகலுமேயாம். அந்நூல்கள் ஐயந்திரிபறச் செவ்வனே விளக்கி நன்னிலைப்புகுத்தும் வேதசிவாகமங்களும் அவற்றின் வாயிலாய்வந்த பிறநூல்களுமா மென்பார் பெரியார்.

இங்ஙனமாயின், கற்றோரும், மற்றோரும், எச்சமயத்தாரும், எக்காலத்திலும் போற்றிப் புகழப்படுவதும் தமிழகத்து ஓர் கண்போன்று விளங்குவதுமாய தெய்வத்தன்மைத் திருவள்ளுவர் திருக்குறளையும் ஏனைய இதிகாசபுராண காவியங்களையும் நாம் கசடறக்கற்று அவற்றின்படி நடப்பதே வீடெய்தச் சிறந்ததோர் மார்க்கமாம். நாயனார் தங்குறளில், வினைத்தூய்மை என்னுமதிகாரத்தில்,

"ஈன்றாள் பசிகாண்பானாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" என அறிக்கையிட்டிருக்கின்றாராகையின், அதனுண்மையித்தன்மைத்து எனக்கண்டு அதனைப் பின்பற்றுவது மானிடர் கடமையாகும். தாய் தந்தை முதலாயினோர் பசிப்பிணியாலோ வேறுகாரணத்தாலோ வருந்துங்காலத்து தீங்குசெய்தாகிலுங் காப்பாற்றுகவென்று அறநூலில் அறிவுறுத்தியிருப்பினும், அப்படிச் செய்வது தகாது என்று நாயனார் வற்புறுத்திக் கூறுகின்றமையின், தனக்குத் துன்புறுமமயத்து ஒருவன் எவ்வாறு ஒழுகல்வேண்டுமென்பது அகங்கை நெல்லிபோல் விளங்குவதாலும், ஆகையால் இன்புறுங்காலத்து அவன் எவ்விதமிருக்கவேண்டுமென்பது தெற்றெனத் தெரிவதாலும் இச்சிறுவாக்கியத்திற் பதிந்துள்ள நீதியின்தன்மையை என்னென்றியம்புவது! ஆகவே, இடுக்கணுற்ற காலையிலும் பெரியாரால் வரையறுக்கப்பட்ட நீதிநெறிகளினின்றும் வழுவாமல் மானங்காப்பதையே மக்களாய்ப் பிறந்தார் தொழிலாகக் கொள்கவெனச் செய்யுள் முழங்குகின்றது.

நமது ஒழுக்கத்தையும் நமக்கு உண்டாம் நயபயங்களையும் பயபக்தியாய்ச் சீர்தூக்கிப்பார்த்து, பின்னுக்கு நமக்கு க்ஷேமமில்லாததை க்ஷேமமென மாறுபாடாய் நினைக்காமல் பிற்பருவத்திற்கு வேண்டுவதை முற்பருவத்தில் சம்பாதித்து வைக்கவேண்டியிருத்தலான், நாம் நீதிநெறிகளில் சிந்தையைச் செலுத்தி, அவைகளினுண்மையை ஊன்றிப்பார்த்து, தீயோ

மூக்கத்தை நிறுத்திவிட நமக்கு வசம் இருக்கும்போது நிறுத்தி விடுவதுந்தவிர ஆன்றோர் ஆக்ஞாபித்த செம்மார்க்கத்திற் செல்லவும் வேண்டும். சான்றோர் சாற்றிய சற்குணங்கள் மலிந்து கிடப்பதால், யாவற்றையுந் தெரிவிக்க ஈண்டு இயலாதெனினும், மானம், குலப்பிறப்பு, கல்வி, ஈகை, அறிவு, தானம், தவம், முயற்சி, ஊக்கம், பெரியாரைப்பிழையாமை முதலிய நற்குண நற்செய்கைகள் ஒன்றிற்கொன்று சம்பந்தமுடையவையாயிருத்தலானும், ஒன்றின்றி இன்னொன்றைக் கைக்கொள்வது அசாத்தியமாகையானும், ஒருவன் இவைகள் இன்னின்ன வென்பதை முறையேயறிந்து ஒவ்வொன்றையும் கைப்பற்றுவதன்றியும் பிறர்பாலும் அவைகளைக் கற்பிக்க வேண்டியவனுயுமிருத்தலானும், பெரியார் சொற்களுக்கும் நாம் இருக்கும் இருப்பிற்கும் தாரதம்மியந்தெரிந்து நம்மைச் சீர்திருத்திக்கொள்ள வேண்டியிருத்தலானும், 'குற்றங்களைந்து குணமணைந்து கொள்வதே—கற்றறிமாந்தர்கடனும்'என்பதை யாவரும் மேற்கொள்ளுவார்களென நம்பி, இவைகளொவ்வொன்றின் குணகுணங்களையும் என்சிற்றறிவிற் கெட்டியவரையில் வரையலாயினேன்.

மானம்:— குணங்களெல்லா வற்றுள்ளுஞ் சிறந்த மானமென்பது எந்நாளும் தன்னிலையிலே தாழாமை, தாழ்வு வந்தவிடத்து உயிர்வாழாமை என்னும் ஓர் அரிய குணமாகும். இது மனிதனுக்கு ஓர் அரண்போலிருந்து, அவனை அழுக்காறுமை, கொலை, களவு, கள், காமம் முதலிய தீயவழிகளில் நாடவிடாமல், பெரியாரைப் பிழையாமை, அன்புடைமை முதலிய பெருங் குணங்களைப் பெறச்செய்கின்றது. மாதர்களுடைய கற்புக்குக் காரணமாயிருப்பதும் மானமே. இவ்வருங்குணம் மக்களைவிட்டு விலகுங்கால், தலையின்கணிருந்து மேன்மையடையும்உரோமம் அதனைவிட்டுவீழ்ந்து இழிவுறுந்தன்மைபோன்று, அவர்களும் தமக்குகந்த நிலையைவிட்டுத் தன்மை குன்றுவதன்றியும் தீக்குணங்களால் தீயவழிகளில் திரிந்து அளவில்லாஅவதியடைகின்றன ராகையின், பொருளிச்சை பொறுத்தோ, இன்பம் வேண்டியோ இந்நன்னெறியி னின்றும் நீங்குவது பரிதபிக்கற்பாலதே. எனினும், இவ்வின்பங்கருதி இழிதொழில்களைத் தொட்டு மேன்மையுற்றிருக்கும் கணக்கில்லாக் கனதனவான்களை நாம் கண் கூடாகக் காணும்பொழுது இது எங்ஙனமாக்குமென்று அநேகர் மனம் ஐயுறலாம். செல்வமும், அதன் காரணங்கொண்டு வரும், இன்பமும், இன்னும் இவை போன்ற பொருட்களும் ஒருவனிடத்தில் நீடித்து நில்லா, அவை மின்னலைப்போல் அதிவிரைவில் நீங்குந் தன்மையுடையன. எப்படி யெனில்,நேற்று ஏகாதிபதி யெனப்பெயர்வகித்து மகுடங்கொண்டு கோலோச்சும் அரசன் இன்று உதரோபாதை

யினிமித்தம் கையில் அட்சய பாத்திரமேந்தி பிட்சாடனம் செய்வதையும், இன்று சோற்றுக்கொன்று மின்றி ஊரூராய் அலைந்து திரியும் ஒருவன் நாளைச்சிம்மாசனமேறி தனக்குள் அநேக ஆயிரவரை யடக்கி யாளுவதையும் நாம் பார்க்கிறோம். இதையினிதுணர்ந்த பட்டினத்தடிகள்,

"தெய்வச் சிதம்பரதேவாவுன் சித்தந்திரும்பி விட்டாற்
பொய்வைத்த சொப்பனமாமன்னர் வாழ்வும்புவியு மெங்கே
மெய்வைத்த செல்வமெங்கே மண்டலீகர்தம் மேடையெங்கே
கைவைத்த நாடகசாலை யெங்கேயிது கண் மயக்கே."

எனத்திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றனர். இன்பங்களுக்சென்று தன்னிலையினின்றுந் தவறுபவன் தீராப்பழிக்கு ஆளாவதுமன்றி அவனை யாரும் மதிக்கவுமாட்டார்கள்; அவனிடத்திற் பயப்படவு மாட்டார்கள்.

இத்தன்மைவாய்ந்த பிரபுக்கள் உயர்நிலையடைந்து, சொற்பலாபத்திற்காக, தங்கள் கருமங்களாகிய துர்க்கிருத்தியங்களைச் சிறிதும் வழுவாது நடாத்தி ஈற்றிலே இடைஞ்சலடைவது சகஜம். இவர்கள் கொடுஞ்செய்கை சந்திராதித்தர் கதிமாறினும் இவ்வுலகில் வழங்காமற்போவது அசாத்தியமே. ஆகையாற்றான், "மானமழிந்த பின்வாழாமை முன்னினிதே" என்று பெரியோர் போற்றுகின்றனர். மானமழிந்து வாழ்பவர் போன்றின்றி,

"இறந்திடவரினுமல்லா லிடுக்கணொன்றுறினுந்தம்பாற்
பிறந்திடுமானந்தன்னை விடுவரோபெரியரானோர்
சிறந்திடுமிரண்டுநாளைச் செல்வத்தைவிரும்பியானுந்
துறந்திடேன்பிடித்தகொள்கை சூரனென்றொருபேர்பெற்றேன்."

(கந்தபுராணம்)

"இளிவரின் வாழாதமான முடையா
ரொளிதொழு தேத்து முலகு" (குறள்)

என்ற ஆன்றோர்க ளறிக்கைப்படி உயிர் நீங்குங்காலத்தும் மானத்தைக் கைவிடாதவர்கள் உலகில் என்ஞான்றும் ஏத்தித் தொழப்படுகின்றனர். ஒருபொய்சொல்ல அஞ்சி அரிச்சந்திரன் பட்டபாடும், பின்பு, அவன்பூத வுடம்பிலன்றிப் புகழுடம்பினும் பெற்றபேறும் தற்சமயம் யாவர் ஞாபகத்திற்கும் வாராமற்போகாது. ஆகையால், ஒருவன் தன்மானத்தைக் காத்துக்கொள்ளமுயலுவானாயின், நற்குணம், நன்னடக்கை முதலிய யாவும் அவனைத்தாமே வந்தடையு மென்பது சிறிதும் ஐயமின்றாம்.

குலப் பிறப்பு:— குலப்பிறப் பென்பது உயர்ந்த குடியிற் பிறந்தார் இன்னின்ன தன்மை கொண்டவர் என்பதைக் கூறு

வதாம். ஈண்டு உயர் குடிப்பிறந்தார் என்பது லௌகிக சம்பந்தமான விஷயங்களில் உயர்பதவியடைந்தா ரென்றும், நன்னடக்கையிலே அணுவளவுஞ் சிதைவுறாமலிருக்கும் உயர்ந்தார் என்றும் இருவகையினராகப் பொருள் படுவதான், இவர்களிற் சிறந்தோரின் தன்மை யின்னதென உய்த்துணர்வாம்.

நற்குண நற்செய்கையுடைய நற்குடிப்பிறந்தார் வருணாச்சிரம தருமம், வாய்மை, நாணம் முதலிய குணங்களையும் கல்வி கற்காதிருந்தாலும் நழுவவிடார்கள். கல்வியால் அவர்கள் மேன்மேலும் மேன்மை யுறுவரேயன்றி நீதிநெறிகளி னின்று சிறிதும் வழுவார்கள். இன்பதுன்பங்களெல்லாம் அவர்களுக் கொன்றே. தங்களை நடுநிலையில் நாட்டி இன்பம் வரினும் துன்பம் வரினும் சித்தஞ்சலிக்காதிருந்து, இழிந்தோர் நன்றுதீது என நாமம் கற்பித்துச் சொல்லும் உற்பாதங்களைத் துரும்பெனவும் மதிக்காத சுத்தவீரர் அவர்களே யாகையால், அவர்களுக்கெதிரிகள் ஒருவருமில்லை. தாம்கொண்ட விரதங்கள் சரிவர நடைபெறுவதில்லை யென்று சற்றுத்தெரிந்தால் அவர்கள் மனஞ் சகியாது உயிர் துறப்பினுந் துறப்பர்.

உலக வியவகாரங்களில் மாத்திரம் உயர்நிலைபெற்ற மேதாவிகள் இதற்கு நேர் விரோதமாய்க் காண்கின்றனர்; நன்னெறியென்றும் தீநெறி யென்றும் பாராமல் தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்றமாதிரி பற்பல தந்திரோபாயங்களாலும், மனங்கவரும் மாயப் பேச்சாலும் அநேகரை மயக்கி தாம் கொண்ட கருமமே நற்கருமமென நாட்டுகின்றவர்களாகவே யிருக்கின்றனர். இவர்கள் தங்கள் மதி, மதம் இரண்டிற்கும் பங்கம் வருத்துவதன்றியும் அநேகருக்கு அளவில்லா இடர் விளைவிக்கின்றனர். இவர்கள் சுயநலங்கருதியே இத்தன்மையை மேற்கொண்டார்கள் போலும். மற்றசகோதரர் எக்கேடு கெட்டாலும் இவர்களுக் காவதென்னை? தாங்கள் நன்றாயிருக்க வேண்டுமென்றும் தங்கள் குடும்பங்கள் சுகித்திருந்தாற்போதுமென்றும் எண்ணி ஆனந்தமடை பவர்களன்றோ இவர்கள்! தாம் உன்னத பதவியிலிருக்குங்கால் தம்மில்லத்திற்கு வெகு சமீபத்தில் தங்களால் தற்சமயத்தில் துன்பமனுபவிக்கு மெளியாரைச்சிறிதும் சிந்திக்காவிடினும், தம் துர்க்கிருத்தியங்களால் தாம் அவர்கள் நிலையையடையும் சமயத்து இவர்கள் தம் முன்னிலையை நினைத்து இன்னலுறும் போதன்றோ அவர்கள் கஷ்டம் இப்படிப்பட்டதென்றினிது விளங்கும். ஆனால், இத்தன்மையில் உயர்நிலை பெற்றாரெல்லாம் இங்ஙனமேயிருப்பரா? எனக்கேள்வி பிறக்குங்கால், உயர் குடிப்பிறப்பாளராகிய சான்றோருக் கமைந்திருக்கு மியல்புகளெல்லாம் யாருக்குண்டோ அவர்களே இதிலும் மேன்மையுறுவர். இப்பரத கண்டத்திற் கென்

றேமானுடப் பிறப்பெய்தியவர்களும், பரோபகார சிந்தையி லேயே சித்தத்தைச் செலுத்தி இக்கண்டவாசிகளுக் கென்றே தம்முயிரை அர்ப்பணஞ் செய்தவர்களுமாய கோகலே, தாதா பாய் நவரோஜி முதலிய மகான்கள் தங்களின்ப துன்பங்களைத் துரும்பெனத் தள்ளி,

"உடுக்கையுலறி யுடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப்பாளர் தங்கொள்கையிற் குன்றா
ரிடுக்கண்டலை வந்தக் கண்ணுமரிமா
கொடிப்புற் கறிக்குமோ மற்று" (நாலடியார்)

என்னும் ஆன்றோர் அரிய மொழியை மெய்யாக்கினர்.

ஆயினும், நற்குடியிற் பிறந்தார் தான் அத்தருமங்களைக் கொள்ளுதல் கூடும் என்றிருக்க, யாவரும் அவைகளைக்கடைப்பிடிப்பது சாத்தியமாகாதே என்றுமோர் எதிர்வாதம் பிறக்குமாயின்,

"நீதிவழுவா நெறிமுறையின்—மேதினியி
லிட்டார் பெரியோர் இடாதாரிழி குலத்தோர்
பட்டாங்கி லுள்ளபடி" என்றஔவைப்பிராட்டியார் வாக்கா ல்நன்னெறியில் நடப்போரெல்லாம் நற்குடிப்பிறந்தா ரெனத் தெரிவதால் யாவரும் நற்கருமங்களிலேயே கண்ணுங் கருத்து மாயிருக்க இடமிருக்கிற தென்றே தோன்றுகின்றது.

கல்வி:— அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களை யடையச்செய்யுஞ் சாதனங்களில் பிரதான ங்களில் பிரதானமானவை மேற்கூறிய மானம், குடிப்பிறப்பு முதலியவைகளே யாயினும், அவற்றிற்கு அனுகுணமாயிருந்து மேன் மேலும் உயர்வுபெறச் செய்வது கல்வியேயாகும். கல்வி கற்பதால் அறிவு விசாலமாக ஆராய்ச்சி யதிகரிக்கின்றது. ஆரா ய்ச்சியின் தன்மையால் மனம் நன்மை, தீமை இருவழிப்பட்டு தீமையினின்று நீங்க, ஒரு பொய்யொழிக்க ஒன்பது பொய் சொல்லுமாப்போல், தீச்செயல்களும் செய்யத் தூண்டுவதால், கல்வியின் பயன் இருவகைப்படும். மனம் நன்மையின்பால் நாடி யிருக்குங் காலத்துத் தான் நால்வகைப் பொருட்களும் பெறக் கல்வி உதவிபுரியும். இப்படிக் கல்வியானது இருவகைப்பயனை யுங் கொடுக்கவல்லதா யிருத்தலால், அநேகர் படித்துக் கெட் டுப் போகவும் வழியிருக்கிறதே! அவர்கள் கற்காமலிருந்தால் துர்நடவடிக்கைகளை யடைய மார்க்கம் இல்லையே! படித்துக் கெட்ட பெரும்பாவிகள் பலரை நாம் கண்டுங்கேட்டு மிருக்கின் றோமே! ஆதலால் கல்லாமை மேன்மையன்றோ? என்று வினா எழுவதும் உண்டு (தொடரும்)

K. R. கணபதி பிள்ளை, குணியமுத்தூர்.

அறம்

"அறஞ்செய விரும்பு" என்று நம்மூதாட்டியாராகிய ஔவையார் திருவாய் மலர்ந்தருளிய நீதிவாக்கியத்தை நாம் சற்று கவனிக்கு மிடத்து அறத்திற்சிறந்த அருமையான பேறுவேறு இல்லை யெனவே விளங்குகின்றது. இவ்வரியபேற்றை அடைதல்மிக்க எளிதன்று, ஊழ்வினையினால் அடைதற்பாலதேயன்றி வேறல்ல. "கொடையே யெவர்க்கும் எப்பேறும் கொடுக்கும்" என்னும் காஞ்சிபுராணச் செய்யுளால் இல்லாதார்க்கு ஈதல் மோட்சத்தை அளிக்கு மெனக்குறிப்பித் திருக்கிறபடி நாம் மோட்சசாதக மாகிய சாகரத்தைக் கடக்கவேண்டுமாயின் தருமமாகிய தோணியில் ஏறிச்சென்றாலொழிய வேறெந்த சாதகங்களிலாவது அடைதற்பால தன்று. பிறப்பை அறுப்பதற்கு நெறியாகியஅறத்தைப்புரிய நல்கூர்ந்தாரால் முடியாததலால் செல்வரே பிறப்பினை அறுக்கும் நெறியினை அடைவர். தருமம் யாருக்குச் செய்யவேண்டும், யாருக்குச்செய்யப்படா தெனில்,

"வறியர்க் கொன்றீவதே யீகைமற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரதுடைத்து"

என்று தெய்வப் புலவராகிய திருவள்ளுவ நாயனார் தருமத்தை மிக்க தரித்திரரா யுள்ளவர்களுக்கே கொடுத்துதவ வேண்டு மெனத் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றனர்.

"சாதியிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதிவழுவா நெறிமுறையின்—மேதினியி
லிட்டார் பெரியோரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி"

என்றபடி, இவ்வுலகத்தில் தர்மம்செய்பவர்களே பெரியோரென்றும் மற்றவரை வரும் கீழோரென்றும் ஆன்றோர் வெளியிட்டிருக்கின்றனர். மேலும் தர்மவான்கள்எவ்வித இடருற்றிருப்பினும் தாம்செய்யும் தருமத்தை நிறுத்தமாட்டார் என்பதை,

"ஆற்றுப் பெருக்கற்றடி சுடுமந்நாளு மவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நற்குடிப் பிறந்தார்நல் கூர்ந்தாரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து" என்னும் மூதோர்வாக்கால் விளங்குகின்றது. தர்மம் பலவகைப்பட் டிருப்பினும் அன்னதானமே மிகவும் சிரேஷ்ட மானது.

"ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்"

"பாத்தூண்மரீ இயவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்டலரிது" என்றபடி, பிறர்க்கிட்டுண்ணுவோனைப் பசிப்பிணி யணுகாது. பிறருக்குக் கொடுத்துத் தாமும் உண்பதே மிகவும் உத்தமம்.

'இரத்தலினின்னாது மன்றநிரப்பிய
தாமே தமியருணல்'' என்றபடி, பிறர்க்குதவாமல் தாமே யுண்டல் யாசிப்பதினும் துன்பமன்றோ? ஆனால் தருமத்தை நல்ல பலசாலியாய் யாதொரு தொழிலுமின்றிச் சோம்பித்திரியும் சிலருக்கும், தமக்கு வேண்டிய பொருளிருந்தும் இல்லாதவர்களைப்போல் பாவனை செய்து இரக்க ஆரம்பிக்கிறவர்களுக்கும் கண்டிப்பாய் செய்யலாகாது.

ஆகையால் செல்வர்கள் மிடியில் வருந்திக்கிடக்கும் ஏழை ஜனங்களுக்கு தம்மாலியன்ற உதவிபுரிந்து, புகழும், கீர்த்தியும் அடைந்து மோட்சத்திற்குச் சாதனமாகிய தருமத்தை எந்நாளும் கைப்பற்றி ஒழுகவேண்டும் என்றும், தர்மம் செய்யாதவர்களுக்கு உண்டாகுந்துன்பம் இதுவெனவும் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகிய திருமூலநாயனாருடைய அடியிற் குறித்த செய்யுளால் நன்கு விளங்குகின்றது.

''இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும்
தருமம் செய்யாதவர் தம்பாலதாகும்
உறுமுடிநாணம் உரோணிகுழலை
தருமஞ்செய்வார் பக்கல்தாழகிலாவே''

நிற்க, அறத்தின் மேம்பாட்டை நாம் அநேகபுராணங்கள் முதலியவற்றால் கண்ணுற்றிருக்கின்றோம். தருமமே பிரதானம் என்ற நீதிவாக்கியத்தை நன்குணர்ந்த சிபிச்சக்ரவர்த்தியைக் காண விருப்புற்றவராய் தேவேந்திரன் பருந்தாகவும் அக்கினி பகவான் புறாவாகவும் வடிவங்கொண்டு புறாமுன் செல்லப்பருந்து அதனைப் பின்தொடர்ந்து செல்லக்கடைசியாய் சிபிச்சக்கரவர்த்தியின் முன்பாகவந்து சேர்ந்தன. புறா சக்கரவர்த்தியின் மடியில் சரணாகதியாக அடைக்கலம் புகுந்தது. பருந்து, அரசனைநோக்கி''மண்டலாதிபதி! யான் துரத்திவந்த இப்புறாவை நீர் பிடித்துக் கொண்டீர் எனக்குப் பசிநோய்தாங்கமுடியவில்லை'' என்று நவில தர்மசீலனாகிய அரசன் ''பருந்தே! உன்பசியையாற்ற இப்புறாவுக்குரிய மாமிசத்தை என்சரீரத்திலிருந்து அறுத்துக் கொடுத்துதவு கின்றேன்'' என்று தராசைக்கொண்டுவர ஆஞ்யாபித்து ஒருதட்டில் புறாவையும் மறுதட்டில் தன்சரீரத்தில் அறுத்த மாமிசத்தையும் சீர்தூக்கிப் பார்க்க புறாவைத்திருக்கும் தட்டு கீழேசெல்லத் தன் சரீரமுழுவதையும் அறுத்து வைத்தனர். அந்தோ! வந்தவர்கள் சக்கிரவர்த்தியின் உடலில் மாமிசம் இல்லாததைக் கண்டு வருத்த முற்றவர்களாய் தங்கள் சுயரூபத்துடன் அரசன் முன்தோன்றி ''சக்கிரவர்த்தியே! உன்னைப்போல் தர்மசிந்தனை யுள்ளவர் இம்மூவுலகத்தினுமில்லை'' எனப்புகழ்ந்து வேண்டிய வரங்களைக் கொடுத்தருளித் தங்களிருப்பிடஞ் சென்றனர். ஆகையால் எவற்றினும் தருமமே மேலதாகும்.

தி. அரங்கசாமி நாயுடு.

பெற்றோர்கள் கடமை

பெற்றோர்கள் கடமை என்றால், பெற்றோர்கள்=தாய் தந்தையர்கள், கடமை=அவசியம் செய்யத்தக்கது. எனவே தாய் தந்தையர்கள் தம்மக்கள் விஷயத்தில் அவசியம் செய்யக் கடன் பட்டிருப்பது யாது என்பதாம்.

இங்கு தம்மக்கள் விஷயத்தி லென்று மாத்திரம் வருவித்துக் கூறியதின் நோக்கம், அவர்களை முன்னிட்டே தாய்தந்தையர்களுக்கு பெற்றோர்கள் என்று பெயர் வந்திருக்கின்றமையினாலேயே.

இனி பெற்றோர்கள் அவசியம் செய்யவேண்டியது யாதென ஆராயின், அது தம்மக்களைக் காப்பாற்றுதலாம். எவ்விதமெனின், அவர்களை உயர்நிலையை யடையச் செய்வதாகிய நல்லொழுக்க நெறியையும், கல்வியறிவையும் விர்த்திசெய்தலே யாகும்.

காப்பாற்றுதலென்றால் சாதாரணமாய்க் காணி, மனை, இல்லம், கைப்பொருள் முதலியவைகளை மிகுதியுஞ்சேர்த்து வைத்தல், மக்களை ஆடையாபரணங்களால் அலங்கரித்தல், போஷித்தல் முதலியவைகள் காப்பாற்றுத லாகாதோவெனின், இவைகள் அவ்வளவு முக்கியமானவைகளல்ல. ஏனெனின், இவைகள் கொடுப்பதினாலும், சோரராலும், வெள்ளத்தாலும், அக்கினியினாலும், மற்றும் பலகாரணங்களாலும், குறையவும், கெடுதியுறவும் கூடும். ஒழுக்கமும், கல்வியுமோ, கொடுப்பதினால் விர்த்தியும், மேற்கூறிய சோரர் முதலியவைகளினால், குறைதல் முதலிய கெடுதியு முறாது. இவ்விரண்டு மின்றி மற்ற காணி முதலியவற்றைச் சேர்த்து வைத்தால், இவற்றை வருந்திச்சேர்த்த பெற்றோர்கள் தாங்கள் இருக்கிறவரையில் அவைகளைக் காப்பாற்றவும், விர்த்திசெய்யவும் முடியுமே யொழிய, இவர்கட்குப் பிறகு மக்கள் மேற்படி வழியை, யறியாதவர்களாய் அவற்றை இழக்க நேரிடுவதோடு, பற்பல இடையூறுகளையடைந்தும், யாவராலும் தாழ்வாக மதிக்கப்படுவார்கள். ஒழுக்கமும் கல்வியும் மக்களை மேன்மைப்படுத்து மென்பதற்கு அதையே தமக்கு அணிகலமாக உடையவர்களுடைய நிலைமையும், அதை அனுபவித்துக் கூறிய ஆன்றோர்களுடைய அருமைத் திருவாக்குமே சான்று பகரும். இது பற்றியே,

"தீதுநன் றறிகிலாச் சேயரென் செய்குவார்
கோதறவவரை நன்னெறியிற் கூட்டிடா
தேதங்களவர் முன்செய்தி றிவைக்கற்பிக்கும்
தாதைதாய் மக்கட்குச் சத்துருக்களே."

அதாவது, நல்லொழுக்க நெறியை மக்கட்பொருட்டாவது தாம் நடத்திக் காட்டி அவரைத்திருத்தாத பெற்றோர் அவர்கட்குச் சத்துருக்களே என்றும்,

"மாலினுலிருவரு மருவிமாசிலாப்
பாலனைப் பயந்தபின் படிப்பியாதுயர்
தாலமேற் செல்வமாய் வளர்த்த றங்கட்கோர்
காலனைவளர்க்கின்ற காக்ஷிபோலுமே."

அதாவது, கல்வி கற்பிக்காது பிள்ளைகளைச் செல்வமாய் வளர்த்தல், உலகத்துக் கெல்லாம் எமன் ஒருவனுயிருக்கிறுன், நமக்கென தனியே எமனை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தாமே வளர்த்தலை ஒக்குமென்றும் கூறியுள்ளார்கள். அதோடு,

"தந்தை மகற்காற்று நன்றியவையத்து
முந்தி யிருப்பச் செயல்" என்றும்,

"வைய்யுழிக் கோட்படாவாய்த் தீயிற்கேடில்லை
மிக்கசிறப்பி னரசர் செறின் வவ்வார்"

"எச்சமென வொருவன்மக் கட்குச் செய்வன
விச்சை மற்றல்ல பிற" என்றும் மொழிந்துள்ளார்கள். ஆகையால் இவ்வித கடமைகளைச் செய்யாது. மற்றபொருள் முதலியவற்றை மாத்திரம் சேர்த்து வைத்துச் சென்ற தந்தையைப்பற்றி ஒருவர் தனக்கு வயது வந்தகாலத்து மனமெரிந்து அடியில் வருமாறு கூறியிருக்கிறுர். அது,

"அள்ளிக்கொடுக்கின்ற செம்பொன்னுமாடையாபரணமும்
கொள்ளிக்கும் பட்டகடனுக்குங் குறித்துவைத்த தல்லால்
துள்ளித்திரியுங் காலத்திலேயென் துடுக்கடக்கி
பள்ளிக்குவைத்திலனே தந்தையாகிய பாதகனே" என்பதாம்.

இதனுல் மற்றப் பொருள்களைச் சேர்த்து வைத்தலினும், ஒழுக்கத்தையும், கல்வியையும் இன்றியமையாது செய்விக்க வேண்டுமென்பது பெறப்பட்டது.

இதில் கல்வியையோ மக்கட்கு 5-வயது முதற்கொண்டு கற்பிக்கத் தொடங்க வேண்டுமென்று முன்னோர்கள் விதித்திருக்கிறார்கள்; நல்லொழுக்கத்தையோ, இளங்குழந்தைப் பருவம் முதற்கொண்டே கற்பிக்கத் தொடங்க வேண்டும். இப்பழக்கந்தான் "தொட்டிற் பழக்கஞ் சுடுகாடு மட்டும்." என்றபடி நாளுக்குநாள் விர்த்தியாகி கல்வியோடு கூடியகாலத்து மிகவும் சிறப்புற்று மேனிலையை யடைவிக்கும். ஆகையால் இவைகளை இளமையிற் கற்பிக்க வேண்டுமென்பதற் குபமானமாக,

"வருத்தவளை வேயரசர் மாமுடியின்மேலாம்
வருத்தவளையாத மூங்கில் தரித்திரமாய்
வேழம்பர் கைபுகுந்து மேதினியெலாந் திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ் தான்."

என்று ஆன்றோர் மொழிந்துள்ளார்கள். அந்நல்லொழுக்க நெறியாவது:—உண்மை கூறல், 2-திருடாமை, 3-தெய்வ வழிபாடு, 4-அன்புடைமை, 5-கீழ்ப்படிவு, 6-இன்சொற்கூறல், 7-பெருமையின்மை, 8-பொறையுடைமை, 9-ஈகை, 10-நல்லினஞ்சேர்தல் முதலியவைகளாம். இவைகளைப் பெற்றோர்கள், எவ்வெவ்வழிகளினால் புகட்டுவிக்கலாமோ என்பதை, மிகு ஊக்கத்துடனறிந்து, அவ்வாறேபுகட்டு விக்கவும் வேண்டும். இளமையில் மனம் போன போக்குப்படி யெல்லாம் நடந்து, நன்மை தீமைகளை பகுத்தறியும் சக்தியை இழந்து, தனக்கு எளிதாகவும் சுகமென்றுந் தோற்றும்படியான துஷ்கிருத்தியங்களின் படிக்கு நடக்கவிடும் பிள்ளைகள், பெரியவர்களானபிறகு பல அவமானமும் கஷ்டமும் பட்டு சீர் குலைவார்கள். இவர்களையே "அடித்துத் திருத்தப்படாத பிள்ளையும், ஆசிரியரிடம் போதிக்கப் பெறாத பிள்ளையும், அணிப்பிள்ளை கிரிப்பிள்ளை." என்று உதாசீனமாக வழங்கப்படுகிறது. சில பெற்றோர்கள் தம் குழந்தைகளுக்கு இளமையிலேயே அக்காளைத்திட்டு, அண்ணனை உதை, மாமனையேசு என்றும், பல கெட்ட பாட்டுக்களைப் பாடவும், அவர்கள் முன்னிலையில் பல கெட்ட நடக்கைகளை நடத்தியும், கெடுத்து விடுகின்றனர். அவர்கள் கதி என்னாகுமென்பதைப் பற்றி நாம் கூறவேண்டியதே யில்லை. ஆதலின் இவ்வித துர்நடத்தைகளுக்கு இடங்கொடாது சீர்திருத்த வேண்டும்.

இவ்வுலகத்தில் எவ்வளவு மேன்மை பொருந்திய அரசரானாலும், குருமாரானாலுஞ் சரி, அவர்கள் தாமே அந்த அந்தஸ்தை அடையவில்லை. ஆதியில் பெற்றோர்களாலேயோ, பெற்றோரையொத்த அன்புடைய மற்றும்யாவரேலேயோ சீர்திருத்தப்பட்டு முன்னுக்கு வந்தவர்களே. எங்ஙனமெனின்! ஓர்கோபுரமானது தானே உயர்ந்து விடுமா? உயராது. பின் அதற்கு காரண பூதராயிருந்தவர் தகுந்த அஸ்திவாரக் கற்களைக்கொண்டும், சிற்பிகளைக் கொண்டும் செய்விக்கவன்றோ, உயர்ந்து விளங்குகின்றது. அதைப்போலவே தம்மக்கள் உயர்நிலையை யடைவதற்கு பெற்றோர்கள் காரணபூதராயிருந்து, அஸ்திவாரக் கற்களுக்குச் சமானமான நன்னடக்கைகளிற் பழக்கியும் சிற்பிகளுக்குச் சமானமான தகுந்த உபாத்தியாயர்களைக் கொண்டு கல்விகற்பிக்கவும் செய்தால் தான் மக்கள் உயர்நிலையைப்பெற்று, பெற்றோர்களால் காப்பாற்றப் படுந்தன்மையை அடைவார்கள். இஃதே பெற்றோர்கள் கடமையாகும்.

இது காறுங்கூறியவற்றின் சாராம்ஸமாவது, பெற்றோர்களுடைய கடமையாவது மக்களைக் காப்பாற்றுத லென்றும், அக்காப்பாற்றுதல் நல்லொழுக்கத்தையும் கல்வியையும் விர்த்தி செய்தலென்றும், மற்றபொருள் முதலியவைகளைச் சேர்த்து வைத்தலினும் இவைகளே முக்கியமானவைக ளென்றும், இவைகளில் மக்களை இளங்குழந்தைப் பருவம் முதற்கொண்டே பழக்கி வரவேண்டு மென்றும், இளமையில் மனம்போன போக்குப்படி விடப்படாது என்றும், இவ்வுலகில், மேன்மை பொருந்தியயாவரும் தாமாகவே முன்னுக்குவராது ஒருவரால் காப்பாற்றப்பட்டவரே என்றும், இதற்குக்கோபுர திருஷ்டாந்தமும், இதைப்போலவே மக்கள் முன்னுக்கு வருவதற்கு பெற்றோர்கள் காரண பூதராயிருந்து காப்பாற்றவேண்டு மென்றும் கூறப்பட்டது.

ஆகையால் தாய் தந்தையர் இவ்விஷயத்தில் மிகு ஊக்கமெடுத்து மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்பது பசுமரத்தாணிபோலென்க!

க. குப்புசாமி முதலியார்,
சமரஸ சன்மார்க்க சங்கம், புதுப்பாளையம்.

வாய்மை

"பொம்மை மொழி புகன்றறியேம் புகலமன மெண்ணுகினு
மெய்ம்மையல துரையாகா வேதநவில் பயிற்சியாற்
கொம்மைவரு மூலைவாய்மை யுடையோரைக் குறித்துரைப்பி
னெம்மைமுத லெடுத்துரைப்ப ரீர்ங்கமலத் திறைமுன்னும்"

நளமகாராஜன் விவாகம் செய்வதற்கு முன் தமயந்தியிடம் ஓர் அன்னப்பக்ஷியைத் தூதனுப்பினான். தமயந்தியிடத்தில் வந்து, பொய்வார்த்தை புகன்றறியோம். அவ்விதம் பொய் சொல்லமனம் வந்தாலும் எங்களுடைய நாவிலிருந்து, உண்மையல்லாது பொய் ஒருகாலும் வராது. நான்முகனைக் கேட்பினும் நாங்களே, சத்திய வந்தர்கள் என்று சொல்லுவார். ஏனெனில் வாய்மையான வேத வஸ்துவையே எங்கள் நாவானது சதாதுதித்துக் கொண்டிருப்பதால் வாய்மையே எங்கள் நாவிலிருந்து வெளிவரும் என்று தன் இயற்கைக் குணத்தைப் பற்றி பெருமையாய்ப் பேசிற்று.

இன்னும் நமது இதிகாசங்களில் ஒன்றாகிய அரிச்சந்திர புராணத்தை யெடுப்போமானால், நமது முதாதைகள் சத்தியத்தின் மீதுள்ள ஒரே பிடிவாதம் வெளியாகும். நமது உடலின் மேல் புறத்தை தூய்மைசெய்வது நீர் அல்லாமல் வேறு பொருளால் ஆகாது. நமது உயிருக்கு இச்சென்மத்திலும் வருகிற ஜென்மத்திலும் துணையாக யிருப்பதும் மனதை சுத்தம் செய்வதும் வாய்மையே. புன்புலால் ஆக்கையாகிய இச்சரீரத்தை எப்போதும் நிலையாக உள்ளதென்று நினைப்பதற்கில்லை. புலையனும் வெறுக்கத்தக்க இச்சரீரத்தின்மீது காதல் கொண்டு, பாவத்தை சங்காரம் செய்து, மோட்சத்தைக் கொடுக்கும், சத்தியத்தினின்று பிறழமாட்டோம். தீமிகுந்த நரகத்தைக் கொடுக்கக்கூடியதா யிருந்தாலும் மெய்யினின்றும் பொய்யுரையோம்; நாட்டை இழந்தோம், எங்கள் குமாரனை இழந்தோம், எங்களுக் குறித்தான சகல நிதியையு மிழந்தோம்; இன்னும் எங்களுக்கு கிடைக்கு மென்று நாங்கள் நினைந்துள்ள, மோட்சத்தை இழக்க நேரிட்டாலும், ஒருக்காலும் எங்கள் வாயிலிருந்து பொய்வராதென்று அரிச்சந்திரபூபன் கௌசிகனிடம் சொல்ல விஸ்வாமித்திரன் வெட்கியவனாய் மறைந்தான்.

சாஸ்திர சம்பன்னனாகிய சகாதேவனிடம் துரியோதனன் பாரத சண்டை ஆரம்பிப்பதற்கும், தர்மர் தலை அறுந்து விழுவதற்கும் நல்ல நாள் பார்த்துரைக்க வேண்டுமென்று கேட்டான்; தன் மூத்த அண்ணன் தர்மராஜனுடைய தலை அறுந்து விழும்படியான நல்லநாள் பார்த்து வாய்மையே ஆபரணமாக அணிந்துள்ள சகாதேவப் பிரபு சொன்னான். தன் தமயனைக்கொன்றுவிட நல்ல நாள் பார்க்கச் சொல்லுகிறானே ஆகவே நாம் பொய்

சொல்லலாமென்று பொய்யைச் சொன்னானா? இல்லை. ஜோதிட சாஸ்திரத்தின்படி உண்மையே சொன்னான்.

இனிமையான சொற்களே விளையத்தக்க நிலமாகவும், தர்மம் செய்வதே வித்தாகவும் விதைத்து, அதினில் உற்பத்தியாகும் கடுஞ்சொற்களாகிய களையைப்பிடுங்கி எறிந்து "வாய்மை" ஆகிய எருவை அதற்கிட்டு ஜீவகாருண்யம் எனும் அன்புநீரைப் பாய்ச்சி தர்மம் எனும் கதிர் விளைவிக்கத்தக்க ஓர் பலனை இம்மையிலேயே துடங்குவாயாக. நாளை, நாளை, என்றுகழிக்காமல் நாளை நமனுடைய நாள் என்பதை அறிந்து இன்றே தர்மம், வாய்மை, அன்பு, ஆகிய மூன்றையும் கடைப்பிடித்து நடக்கும்படி அறநெறிச்சாரம் கூறுகிறது.

ஒருவன் ஜீவகாருண்யத்தையே, விரதமாகக்கொண்டு சத்தியத்தைக்கைவிடுவானாகில் அவனுக்கு அதினால் யாதொருபலனுங்கிட்டாது. அறத்தை கைக்கொண்டு வாய்மையை நிராகரித்துத்தள்ளுவனாகில் அஃது அவனுக்கு யாதொரு பலனையும் அளிக்காது.

மகாபாரதக்கதையில் நாம் "கொடையில் கர்ணன்" என்பவனுடைய சரிதையை வாசித்திருக்கிறோம். அவன் ஒருக்காலத்திலும் பொய் சொல்லி அறியான். அவன் இல்லையென்ற பதத்தை உபயோகித்தே அறியாதவன். பாரதயுத்தம் பதினேழாம் நாள் சண்டையில் அவனுக்குப் பரசுராமனால் கிடைத்திருந்த சாபத்தால் வில், தேர், வெற்றி, யிழந்து நிற்கும் தருவாயில் அவனுக்கு யாதாமொரு கெடுதலு முண்டாகாமற் தர்மதேவதை அவனைக் காப்பாற்றிக் கொண்டிருந்தது, அவன் இல்லையென்று ஒரு பொய்சொல்லி யிருப்பானாகில் அவன் செய்திருந்த தர்மமெல்லாம், வெயிலிற்கிறைத்த நீரைப்போன்று ஆகிவிடும். ஆனால் தான் சாகும் தருவாயில்கூட தான் செய்திருந்த தர்மத்தின் சாரத்தை யெல்லாம் "இல்லை" என்று சொல்லாமல் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவிடம் தாரை வார்த்துக் கொடுத்தான். "எல்லா விளக்கும் விளக்கல்ல. சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு" (திருவள்ளுவர்) உத்தமகுணம் வாய்ந்த பெரியோர்கள் சத்தியத்தை ஆபரணமாக அணிவார்கள்.

நாம் நடப்பதற்காக எல்லா நெறிகளுமிருக்கின்றன. வெளிச்சம், இருட்டு, உயர்வு தாழ்வு, நன்மை தீமை, அகலம் ஒடுக்கம், எட்டும் படிகள், எட்டாப்படிகள், அழிவு, அழியாமை; இவைகளில் ஏதாவதொன்றில் நாம் பிரவேசித்தால் நன்மை தீமை இரண்டிலொன்றை யடைவோம். உள்ளம் மிகவும்தூய்மையா யிருக்கவேண்டும அவ்விடம் செல்லும்போது பரிசுத்தமான மனதுடன் சென்று "சத்தியத்தினாலாகிய" தாழ்ப்பாளிட்டு பிறருடைய இகழ்ச்சிக்கும் இடங்கொடாமலும் நினையாமலுமிருந்தால் நாம் கோரிய மோட்சத்தை யடையலாம். *B. F.*

பிரதாபன்

அல்லது நட்புமுறை பிறழ்ந்த நண்பன்

(111-ம் பக்கத்தொடர்ச்சி)

ரஜபுத்திர வீரர்கள் அனைவரும் கரகோஷம் செய்தனர். தங்கள் யுத்தாயுதங்களை ஆகாயத்தில் உயர்த்தி மிக்க ஆர்வமுடன் சாருணி தேவியைத் துதித்தனர்.

பிறகு ஜயமாலை வீரசேனனையும் ரணவீர ஸிங்கனையும் தம்மருகே விளித்து, "நீங்கள் அக்பர் சேனை இக்கோட்டையைச் சூழாவண்ணம் தடுத்து விடுங்கள். நான் சிறியசேனையுடன் இக்கோட்டையைக் காத்து நிற்கின்றேன்." என்றார். அவரை யறியாமல் அவர் கண்களில் கண்ணீர் ததும்பிற்று. "நமது குடிகளின் சமாதானத்தைக் கெடுக்க இப்படி பாவிகள் எங்கிருந்து உற்பத்தியாகின்றனர். நமது இந்திய மாதா எப்போது தான் இத்துஷ்டருக்கு இடங்கொடா தொழிவளோ" என்று கூறிவிட்டுக் கோட்டைக்குத் திரும்பினார்.

வீரசேனன், பிரதாபன், ரணவீரஸிங் ஆகிய இம்மூவரும் மிக்க வீரா வேசத்துடன் தங்கள் சேனைகளை நடத்திக் கொண்டு போயினர்.

* * * *
* * * *

அக்பர் சேனையும் ரஜபுத்திரர் சேனையும் ஒன்றையொன்று எதிர்த்தன. கொடிய யுத்தம் நடந்தது. இருதிறத்தாரில் பலர் மடிந்தனர். தாங்கள் தலையிட்டுக் கொண்ட காரியத்தில் சித்திபெற வேண்டுமென்னும் எண்ணத்துடன் பகவன் தாஸும் மான்ஸிங்கும் தங்களுடைய சேனைகளை உற்சாகப் படுத்தினார்கள். வீராவேசங் கிளம்பிய ராஜபுத்திரர் தங்கள் கைவன்மையைக் காட்டினர். மொகலாயரில் எண்ணிறந்தவீரர் மாண்டனர். பகவன் தாஸும் பலத்த காயமடைந்தவனாய் யாதும் செய்ய இயலாது சமர்க்களத்தை விடுத்துப் போயினன்.

மிகுந்த வீரா வேசத்துடன் ரஜபுத்திரர் யுத்தம் புரிந்தனர்.

"ஒரொருடம்பினி லாயிரமாயிர முற்பல வாளிபடத்
தாரைபடும்படி பொழிமுகி லொத்தனர் சமர்முனையிற்றரியார்
மாரனையங்க மெரித்தருள் கண்ணுதல் வடிவமெனும்படியே
பாரொருபாதி சிவந்ததுமேனி பரந்தெழு சோரியினால்"

ஆஹா! ரஜபுத்திரவீரர் எய்த அம்புகள் பகைவர் உடம்பில் பாய்ந்து இரத்தம் பெருகின்ற தோற்றமானது மேகம் மழைத் தாரகளைப்பொழிவது போலவும் இறந்து பட்டவரது இரத்தத்தால் பூமி ஒருபாகம் சிவந்து தோன்றிய தோற்றமானது சிவபிரானின் திருமேனி ஒருபாதி சிவந்து தோன்றுவது போலவும் இருந்தன.

மொகலாயர் சிறிதும் சலிப்படையவில்லை. அன்று நடந்த யுத்தத்தின் தன்மை இன்ன தென்றெடுத்துரைக்க இயலாது.

"குத்துவார் படைக்கலங்கள் கொண்டுமற் குறிப்பினாற்
மொத்துவா ரிரண்டுதேரு முட்டவிட்டு மொய்ம்பினா
லொத்துவார்க ளிற்றினின்று மொருசளிற்றின் முதுகுறத்
தத்துவார் துரங்கமங்க டாரையாக வேறுவர்."

"கொற்றவாளின் முடியிழந்த குறையுடம்பு வாளுடன்
கற்றசாரியோடு மக்கணக்கறிந்து புகழுவா
ரற்றகால்களற்ற கைகளாயுதங்க ளாகவே
யெற்றுவார் படைக்கலன் னிழந்துநின்ற வீரரே."

எனினும், மொகலாயரே முன்னேறிச் சென்றனர். அச்சேனைகளைப் பின்தொடர்ந்து வந்த அக்பர்மிக்க குதுகலமடைந்தான். கோட்டைக்கு இன்னும் சிறிது தூரந்தா னிருந்தது,

அத்தருணம் ஜயமாலை தமது சிறிய சேனையுடன் கோட்டைவாயிலைக் காத்து நின்றார். மொகலாயர் சேனையின் ஒருபகுதி சித்தூர் துர்க்கத்தின் ஒருபாகத்தைத் தகர்க்க அணுகிநிற்க ஜயமாலை யொருவரே தமதுயிரையும் ஒருபொருட்டாக் மதியாது அப்பகுதியில் அநேகரைக் கொன்றனர்.

அச்சமயத்தில் சிறிது தூரத்தே நின்ற அக்பர் குறிபார்த்துத் தன் துப்பாக்கியால் கொன்றார்.

* * * *

* * * *

"முடிந்தது! முடிந்தது! இனி நம்மால் ஒன்றும் இயலாது ஜயமாலையைக் கொன்ற படுபாவியை வெல்வதரிது, அரிது" என்னும் சப்தம் ரஜபுத்திரர் சேனையில் உதித்தது. அப்போது இதுதான் தகுந்த தருணமென்று ரணவீரஸிங்கன் குற்றுடைவாளைஎடுத்துவீரசேனனைக்கொல்லஅவன் பின்புறத்தே வந்தான். அதனைக்கண்டறிந்தமற்றொரு ரஜபுத்திரன் ரணவீரஸிங்கனை யணுகி அவனெதிரில் நின்று அவனுடைய மார்பில் குத்தினான். "இவ்விதம் செய்வதன்றோ சுத்தவீரனுக் கழகு. இந்நேர் வழியைத் தவிர்த்து இவ்வீரரின் பின்புறம் வந்தாயே ஏ! ரஜபுத்திரபேடி" என்றான். குத்துண்டவன், "கெடுவான் கேடுநினைப்பான். என்துர் எண்ணத்திற் கேற்றகதி எனக்கு வாய்த்தது" என்று கடைசி மொழிகூறி கீழே வீழ்ந்து உயிர் துறந்தான்.

அவ்வகோர காட்சியை வீரசேனன் திரும்பிப் பார்க்க, அவனுயிரைக் காப்பாற்றிய வீரன் தன் முக மூடியைக்களைந்து, "நாதா! நான் இப்போது தான் உமக்குகந்த மனைவி, நான் காப்பாற்றிய உமதுயிர் இன்று முதற்கொண்டு என்னுடையதே. இதோ வீழ்ந்திறந்து கிடக்கும் ரணவீர ஸிங்கன் உம்மைப் பின்புறத்தில் நின்று கொல்ல முயன்றான். என்றால் அவனுக்கு இக்கதி வாய்த்தது." என்றான்.

வீரசேனன், "என்னரும் ஹீராபாய்! உன்னை மெச்சினேன்" என்றுகூறி உருக்கரந்து போர் வீரனுடை தரித்து அஞ்சா நெஞ்சினளாய் யுத்தகளம் புகுந்து அவனுயிரைக்காத்த அம்மாது சிரோமணியைக் கட்டியணைத்து முத்தமிட்டான்.

மிகுந்த பரபரப்புடன் அவ்விரு காதலரும் சித்தூர் துர்க்கத்துள் நுழைந்து பின்புறத்தே வெளியேறினர்.

இதுநிற்க, அல்லோல கல்லோலப் பட்டிருந்த ரஜபுத்திர வீரரை ஒன்றாகச் சேர்த்து அவர்களை நடத்திச்சென்று இறந்துபட்ட ஜயமாலையின் பிரேதத்தைப் பகைவர் கைப்படாது எடுத்துக் கொண்டு கோட்டையுள் நுழைந்த பிரதாபன் பின் புறத்தே வெளியேறும் காதலர் இருவரைக் கண்டு அப்பிணத்தைப் பத்திரப் படுத்தக் கட்டளையிட்டு அவர்கள் பின்னே சென்றான். யுத்தகளத்தில் ஹீராபாயைப்போல் பிரதாபனின் உயிருக்கு ஹானி நேரிடாமல் பாதுகாத்துவந்த ஆணுடை பூண்ட லலிதாங்கியும் அவனுடன் போயினள்.

* * * *

இவர்கள் செய்தி இவ்வாறாக, ராஜபுத்திரவீரர் ஜயமாலை இறந்துபட்டவுடன் சிதைந்து போனதைக் கண்ணுற்ற அக்பர் அதிக மனக்கிளர்ச்சியோடு மான்ஸிங்கனுக்கு இனிய வார்த்தைகள்கூறி அச்சித்தூர் துர்க்கத்தை—இதுகாறும் இராஜபுதனத்திற்கு ஜயஸ்தம்பம்போலிருந்து வந்த அப்புராதனக் கோட்டையைச்-சூழ்ந்து கொள்ளக் கட்டளையிட்டான்.

அந்தக்ஷணமே ராஜபுத்திரர் வீராவேசம் மிகுந்தவர்களாய்த் தமதுயிரை ஒருதிரணம் போல் பாவித்து மொகலாயரின் சேனையுட்புகுந்து இகல்புரிந்து அவர்களில் அநேகரைக் கொன்று சமர்க்களத்தில் இறந்து பட்டனர்.

அவர்களுடைய வீரச்செய்கையை யறிந்த ரஜபுத்திர ஸ்திரீகள் தீக்குளித்துயிர் துறந்தனர். இறந்து வீரசுவர்க்கம் புகுந்த அதிவீர ரஜபுத்திரரின் கணக்கு எண்ணாயிரம் என்பர் சரித்திர ஆசிரியர்.

சித்தூர் கோட்டை சிலநாட்களுக்குள் அக்பர் கைப்பட்டது. பகைவரின் வீரத்தை மெச்சும் குணம் வாய்ந்த அம்மொகலாய பாதுஷா ஜயமாலையைப் போன்ற உருவமொன்று விலையுயர்ந்த சலவைக்கல்லால் செய்வித்து டில்லியிலுள்ள தனது அரண்மனையின் சபாமண்டபத்தில் அதை நிறுத்தி அவர் பெயரை மிகவும் கௌரவித்தான்.

யுத்தம் முடிந்தது. பிரதாபஸிங்கன் எங்கேயோ ஓடி மறைந்தான் லோகப் பிரசித்தி பெற்ற சித்தூர் துர்க்கத்திற்கு முடிவும் வந்தது. ரஜபுதனத்தின் மீவார் நாட்டு வாசிகளுடைய சுயாதீனத்திற்குக் காலன் போல் தோன்றினன் அக்பர்.

இருபத்து நான்காம் அத்தியாயம்
முடிவுரை

* * * *

* * * *

மாலை மூன்று மணியிருக்கும்.

காவிரிப்பூம் பட்டினத்தை யடுத்த ஓர் அரண்யத்தின் ஆலமர மொன்றின் நீழலில் ஐவர் உட்கார்ந்து இளைப்பாறினர்.

"வீரசேனா, என்னரும் வீரசேனா! நான் தெரியாதிழைத்துள்ள தவறின் பொருட்டு என்னை நீ மன்னிக்க வேண்டுகின்றேன்." என்றான் அந்த ஐவரில் ஒருவனான பிரதாபன்.

வீரசேனன்:— பிரதாப! மன்னித்தேன் உன்னை என் முழுமனத்தோடு பெண்களால் தவசிகளும் மனத்தடுமாற்ற முறுவது சகஜந் தானே. பாவம்! உன் காதலி பெரிதும் வருந்திக் கொண்டிருப்பள் தன்னகத்தில். அப்பதிவிரதா சிரோமணிக்கும் துரோகஞ்செய்ய உனக்கு மனம் வந்ததே.

பிரதாபன்:— நண்ப! நானென்ன செய்வேன். என்தலைவிதி அவ்வித மிருந்தது. விதியைத் தடுக்க யாரால்முடியும், ஏகபத்நி விரதத்தை அநுஷ்டிக்க இருந்த யயாதியின் விதி எவ்வாறிருந்த தென்று நீ அறிவாயல்லவா?

வீரசேனன்:— பிரதாப! போனது போகட்டும் இனியாகிலும் சன்மார்க்கனாக இருக்க முயற்சி செய்.

பிரதாபன்:— இனி நான் என்னரும் லலிதையைத் தவிர இதர ஸ்திரியைக் கனவிலுங் கருதேன். இது சத்தியம் இது நிச்சயம். முன்னிலும் நம்மிருவர் நட்பு அதிக பலப்பட்டிருக்க வேண்டும்.

வீரசேனன்— அதற்கென்ன.

ராமமூர்த்தி:— ஐயா பிரதாபவீரரே! இதோ உம்மெதிரில் உட்கார்ந்திருக்கும் இப்புண்ணிய புருஷர் யாவரென அறிந்து கொள்ளுங்கள்.

பிரதாபன்:— "யார்?" என்று கேட்கையில் லலிதை மேலணிந்திருந்த மேலுடையைக் களைந்து தன் பெண்ணுடையுடன் அவ்வாடவர் எதிரில் நின்றாள். பிரதாபன் ஆச்சரியமடைந்து எழுந்து அவளைக் கட்டித் தழுவினான். யாவரும் பிரமிப் படைந்தனர்.

ஹீராபாய்:— அவளை நோக்கி "என்னரும் சகோதரீ! உனக்கு உன் காதலர் மீதுள்ள அளவிலாக் காதலின் திறத்தை மெச்சினேன். மெச்சினேன். பிரதாபவீரரே! தன்னுயிரையும் ஒருபொருட்டாக மதியாது காடுமலை வனாந்தரங்கள் கடந்து உம்மைக் காணவந்த இவ்வன

ப்பு வாய்ந்தவனிதை உமக்கு மனைவியாய் வாய்ப்பது நீர் பூர்வீகத்தில் செய்த புண்ணியமே! என்றாள்.

அப்போது லலிதை தான் காவிரிப் பூம்பட்டினத்தை விடுத்து, ராஜபுதனத்தின் மீவார் நாட்டெல்லையை நண்ணி, பிரதாபனைக்காணும் வரையில் நடந்த விஷயங்களைச் சாங்கோபாங்கமாக எடுத்துரைத்தாள்.

"நீயே தீர ரமணி! நீ பழிப்பில்லாத பதிவிரதா சிரோமணி. தன் கணவனுயிரை மீட்க எமனுடன் போராடிச்சென்ற ஸாவித்திரி தேவியும் உனக்கிணையாக மாட்டாள்" என்றனர் அனைவரும்.

* * * *

பொழுது சாய்வதற்குள் ஐவரும் காவிரிப்பூம் பட்டினத்தை நண்ணினர். ராஜவீதி முனையிலிருந்த காளிகோயிலண்டை வந்து அதை மூன்றுதரம் வலம் வந்தனர். "அம்மணீ! உன்னருளால் நாங்கள் அனைவரும் சுகமே திரும்பினோம்." என்றுரைத்து அக்காளிதேவியின் பாதத்தில் சேவித்து எழுந்து நின்றனர்.

அதற்குள் அவர்கள் வந்திருப்பதை யறிந்த அவரவர்களின் சுற்றத்தார் கூடிவந்தனர். அவர்கள் முகத்தில் சந்தோஷம் கூத்தாடிற்று. சுகுண சுந்தரர் லலிதையைக் கட்டியணைத்து ஆனந்த பாஷ்பம் சொரிந்தார்.

வீரசேனன் அவர்களைநோக்கி, "என் அன்பர்காள்! எங்கள் நிர்ணயம் முடிவிற்கு வரவில்லை. ராஜபுத்திரர் சித்தூர் துர்க்கத்தை இழந்தனர். அவர்கள் சுயாதீனம் மறைந்தொழிந்தது." என்று கண்ணீர் விடுத்தான்.

* * * *

ஒரு திங்களுக்குள் வீரசேனன் மீராபாயையும் பிரதாபன் லலிதையையும் வெகு ஆடம்பரத்துடன் மணம்புரிந்து நெடுங்காலம் சுகமே ஜீவித்து வந்தனர். ரஜபுத்திர வீரர் மிக்க வீராவேசத்துடன் அமர் புரிந்தும் சித்தூர் துர்க்கத்தை மொகலாயர் கைப்பற்றிய விஷயம் அவர்கள் இதயத்தை விட்டகன்றிலது. அதை நினைக்குந்தோறும் அவர்கள் கண்களில் கண்ணீர் ததும்பி ஆறாக ஓடிற்று.

* * * *

சுகுண சுந்தரர் புதல்வியைக் காணு வருத்தத்தில் மூழ்கி இருக்கையில் அவரைச் சுக செய்தியால் கடைத்தேற்றிவைத்த புறாவை விட்டு அநேக வருஷகாலம் லலிதை நீங்கினளில்லை.

* * * *

மீராபாய் பதிவிரதா சிரோமணியாதலால், தன்னைக் கலியாணஞ் செய்து கொள்ள நம் பிரதாபன் வற்புறுத்திய விஷயத்தைப்பற்றி வீரசேனனுடன் ஒரு நாளும் சொல்லவில்லை.

நட்பு முறை பிறழ்ந்த நண்பன் நட்புமுறை யறிந்து நடந்தான். வீரசேனனுக்கும் பிரதாபனுக்கு மிருந்த பரஸ்பர அன்பு அதிகரித்தது.

முற்றிற்று.

இ. நா. நாகபூஷணம்.

சவுக்குமரம்

இத்தேசத்திலே சவுக்குமரம் மிகுதியாய்ப் பயிரிடப் படுகிறது. ஆயினும் இம்மரமானது இந்தியா தேசத்திற் குரியதன்று. கடற்கரைகளிலே மணற்பரப்பாகிய இடங்களிலும் ஆற்றங்கரைகளிலும் இது மிகச் செழிப்புற்று உயர்ந்து வளருகின்றது. உயர்ந்த பயிர் செய்வதற்கு உரியதல்லாத வெற்றிடங்களிலும் வெளி நிலங்களிலும் இதனைப் பயிரிட்டு பிரயோசனமடையலாம். இதைப்பயிரிடுவதற்கு அதிகம் செலவு செய்ய வேண்டியதில்லை. ஆனால், முன்னே ஒரு சிறிது செலவு செய்து சில வருடங்கள் வரையும் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். பின்னரே பெரும்பலன் கிடைக்கும் சவுக்குத்தோட்டத்தினாலே அநேக வறிய ஜனங்கள் வறுமை தீர்ந்து செல்வராகி விட்டார்கள்.

இது வளைவு முதலியன இன்றி ஏறக்குறைய 60-அல்லது 70-அடி உயரம் வளரும் இயல்பினை உடையது. இதன் இலை நூல் போல் இருக்கும் இதன் காய்முள்ளுடு முள்ளாய் இருக்கும். இனி, இது பயிரிடப்படும் முறைகளையும் இதனால் அடையும் பலன்களையும் எடுத்துக் காட்டுவாம்.

இச்சவுக்கை நாற்று நட்டு வளர்ந்து வரும் சிறிது காலத்துள்ளே இப்பாத்திகளுக்கு இடையிலே அவுரி, ஆமணக்குமுதலிய பயிர் செய்யலாம் இச்சவுக்குப் பயிர் தானாகவே தலையெடுத்து வளரத்தொடங்கும் வரையிலும் சில நாள்களுக்கு நாடோறும் ஒவ்வோர் முறைநீர் பாய்ச்சவேண்டும். ஆதலால் அது பயிரிடப்படும் புலங்களிலே இடையிடையே நீர் ஊறும் ஆழம் வரைக்கும் சிறுகிணறுகள் தோண்டப்பட வேண்டும். வளரும் வரையிலும் ஆடு மாடுகள் கடிக்கா வண்ணம் பாதுகாக்கப்பட வேண்டும். இதன் பொருட்டுச் செய்யவேண்டிய சலசௌக்கியங்களினால் அப்புலங்களிலே வெண்டை, கொத்தவரை, சுரை, வெள்ளரி, பூசினி முதலியவைகளைப் பயிரிட்டு சிறு லாபம் அடையலாம்.

நாற்று நட்டபின் நல்லபோஷணையும், காவலும் தவறாத பருவ மழைகளும் அமையப் பெறுமாயின் சவுக்கு மரம் ஐந்து வருஷத்திற்குள்ளே வளர்ச்சியுற்று நல்ல பலனைத்தரும். நன்

ருய் வளர்ந்த பிறகு இது வெட்டப்படுகிறது. வெட்டப்பட்ட இதன் கட்டைகள் கரும்பாலைகளுக்கும், பஞ்சாலைகளுக்கும் மிகவும் உபயோகமாகின்றன. இது அதிகமாக விறகாகவே உப யோகப் படுகின்றது. இவ்விறகு அதிக வெப்பமுடையது. சீமைக்கரியின் குணத்திற்பாதி இவ்விறகிற் குண்டு. இதனுல் தான் இதன் விறகு புகை வண்டிகளுக்கும், ஆலைகளுக்கும், ஏனைய யந்திரங்களுக்கும் உபயோகப் படுத்தப் படுகின்றது. இதன் வேரும் விறகாக உபயோகப்படுகிறது. இதன் இலைக ளும், சுள்ளியும் வறிய ஜனங்கள் அடுப்பெரிக்கிறுர்கள்.

இதன் காய்கள் உலர்ந்த பின் அப்பம் சுட்டு விற்பவர்க ளுக்கு மிகவும் உபயோகமாகின்றன. அப்பம் சுடும் சட்டியின் மேலே வைக்கப்படும் சட்டியிலே இதன் காய்களை இட்டு நெருப்பூட்டிஞல் நெருப்பு அதன் காய்களிலே பற்றி அவியாது சுவாலை வீசிக்கொண்டிருக்கும். இம்மரத்தின் அடி முதல் நுனிவரையுமுள்ளயாவும் தழல் தருவதற்கு அதிக பிரயோச னமுள்ள தாகவே காணப்படுகின்றது.

இதன் கழிகள் தார்பூசப்பட்டு வீடு முதலியன கட்டுவத ற்கு உபயோகமாகின்றன. இதன் கழிகள் அநேக வருஷங் கள் வரையும் உளுக்காமல் கெட்டியாய் இருக்கும். கூத்துக் கொட்டகை கலியாண மண்டபம் சாரம் முதலிய இதன் கழி களாலேயே அமைக்கப் படுகின்றன.

இதன் பட்டையினின்றும் ஒருவகைச் சாயம் செய்யப்படு கின்றது. இச்சாயம் வலைஞர்களால் மீன் பிடிக்கும் வலைகளு க்கு போடப்படுகிறது. இதனுல் அவ்வலைகள் பளபளப்பாயும் வலிமை யுடையனவாயும் இருக்கின்றன. மேல் நாட்டாரும் இதினின்றும் காக்கி எனப்படும் ஒரு வித சாயம் செய்கின் றுர்கள்.

இதன் செத்தைகளைக் களர் நிலத்திலே இரண்டடி உய ரம் நெருக்கமாகப் பரப்பி, தண்ணீர் பாய்ச்சிவரின் அந்நிலம் பதப்பட்டு பயிரிடுவதற்கு உபயோகமாகின்றது. இம்மரத்தி ஞல் இன்னும் நாமடையும் பிரயோசனம் எண்ணிறந்தன.

கிருஷிகன்.